விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 25
ஒலி 282 வள்ளுவர் ஆண்டு 2055 புரட்டாதி 10 வியாழக்கிழமை (26.09.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## தியாக தீபம் திலீபனின் இறுதி நாள் நினைவேந்தல் இன்று

### தாயகத்திலும் புலத்திலும் அஞ்சலிக்கு ஏற்பாடு



(யாழ்ப்பாணம்)

தமிழின விடுதலைக்காக உண்ணா நோன்பு நோற்று தனது உடலை ஆகுதியாக்கிய தியாக தீபம் திலீபனின் 37ஆவது நினைவு தின இறுதி நாள் நிகழ்வுகள் இன்று தமிழர் தாயகத்திலும் புலத்திலும் உணர்வெழுச்சியுடன் இடம்பெறவுள்ளது.

(16ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையின் எதிர்காலத்தை அநுரவின் தலைமை பாதுகாக்கும் - ஐ.எம்.எப்

(கொழும்பு)

இலங்கையின் எதிர்காலத்தை ஜனாதிபதி அநுர தலைமையிலான அரசாங்கம் பாதுகாக்கும் என ஐ.எம்.எப் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் கிறிஸ்டலினா 15

## மதுபான விற்பனை லைசன்ஸ் இரத்து

### ஜனாதிபதி உத்தரவு

(கொழும்பு)

மதுபான விற்பனை அனுமதிப்பத்திரங்களை இரத்துச் செய்யுமாறு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க உத்தரவு பிறப்பித்துள்ளார். 05



# ஜனாதிபதி அநுரவின் அதிரடி ஆட்டம்

### மக்கள் மகிழ்ச்சி; அரசியல்வாதிகள் அதிர்ச்சி

(கொழும்பு)

புதிய ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் அதிரடியான நடவடிக்கைகளால் முன்னாள் அமைச்சர்கள் உள்ளடங்கலாக அரசியல்வாதிகள் பலர் பயப்பீதியில் அதிர்ச்சியடைந்துள்ள நிலையில், நாட்டு மக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

(15ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல்வாதிகள் பொலிஸாரை தொடர்பு கொள்ள முடியாது

### அமைச்சர் விஜித ஹேரத்



(கொழும்பு)

அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் எவரும் பொலிஸ் உயர் அதிகாரிகளை தொடர்பு கொள்ளும் நடைமுறைகளில் 15

## வட மாகாண ஆளுநராக வேதநாயகன் பதவியேற்பு

(கொழும்பு)



வடமாகாண ஆளுநராக நா.வேதநாயகன் நேற்று ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க முன்னிலையில் பதவியேற்றார். 15

## யாழ்ப்பாண எம்.பிகள் 6 ஆக குறைவடைந்தது

### வன்னி 6 ஆக அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத் தேர்தல் தொகுதியில் எம்.பிக்கள் எண்ணிக்கை 6 ஆக குறைவடைந்ததோடு வன்னித் தேர்தல் தொகுதியில் எம்.பிக்களின் எண்ணிக்கை 6 ஆக அதிகரித்துள்ளது.

2024 பொதுத் தேர்தலில் ஒவ்வொரு 15

## கல்லுண்டாயில் மோ.சைக்கிள் மோதியதில் ஒருவர் பலி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கல்லுண்டாயில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் 15

## பொதுத் தேர்தல் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டணியினர் யாழில் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

நடைபெறவுள்ள பொதுத் தேர்தல் தொடர்பில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் கலந்துரையாடல் ஒன்று நேற்று இடம்பெற்றது.

நேற்றுப் பிற்பகல் யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விருந்தினர் 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## அடக்குமுறைகளுக்கு எதிரான ஜனநாயக அமைப்பு

### இயன்றவரை முயன்று இளையோரே எழுவீர்!

எமது மக்களின் இன்றைய அவலநிலை கண்டு அடக்குமுறைகளுக்கு எதிரான ஜனநாயக அமைப்பு தனது செயற்பாடுகளை விரிவாக்கம் செய்ய முயலுகின்றது.

தமிழர் தேசத்தில் புரையோடிப்போயிருக்கின்ற அரசியல் அபிலாசைகளை இதுவரை காலமும் தமிழ் மக்கள், தங்களால் தெரிவு செய்யப்பட்ட தமிழ் அரசியல்வாதிகளை நம்பி உப்புச் சப்பில்லாத தீர்வுகளையும், சிங்கள தலைவர்களுடன் சேர்ந்து திட்டமிடுவதுடன் தாங்களும் ஏமாறுவதுடன், தமிழ் மக்களையும் ஏமாற்றி தமிழ் மக்களின் இருப்பையே கேள்விக்குறியாக்கும் வயது முதிர்ந்த தமிழ் அரசியல்வாதிகளை முற்றாக அரசியல் அரங்கிலிருந்து அப்புறப்படுத்தி, தமிழர் தேசத்தை நேசிக்கின்ற, தமிழ் மக்களை உளமாற விரும்புகின்ற, புரட்சிகரமான சிந்தனையுடைய, தமிழர் அரசியலைத் தலைமை ஏற்று நடாத்த விரும்புகின்ற ஒழுக்கமுள்ள இளைஞர் சந்ததியை வரவேற்று நாங்கள் எங்கள் பாசறையை திறந்து வைத்திருக்கிறோம்.

ஆள வேண்டுமென்றோ வாழ வேண்டுமென்றோ ஆசை கொள்ளாமல் ஒரு புரட்சிகரமான தூய அரசியலை எம் மண்ணில் தோற்றுவிப்பதே எம் இலட்சியமாகக் கொண்டு தமிழ் இளையோருக்கு நாங்கள் அறைகூவல் விடுக்கின்றோம்.

நான் பெரிது நீ பெரிது என வாழாமல் நாடு பெரிது என நினைத்து எங்களுடன் கைகோருங்கள்.

(2123)

**தம்பி தம்பிராஜா ஒருங்கிணைப்பாளர்**

**077 730 1961 ,074 005 5961**

---

31 ஆம் நாள்

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



அன்புடையீர்!

கடந்த 28.08.2024 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர்

## அமரர் கார்த்தி அருந்தவராசா

அவர்களின் அந்தியேட்டி சபிண்டீகரணக் கிரியைகள் நாளை (27.09.2024) வெள்ளிக்கிழமை காலை 5.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று அஸ்தியானது தொண்டைமானாறு செல்வச்சந்நிதி புனித தீர்த்தக்கரையில் கலக்கப்படும். அதனைத் தொடர்ந்து அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இவ்வழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

உடுப்பிட்டி வீதி,
தொண்டைமானாறு.

இங்ஙனம்
குடும்பத்தினர்

(379)

---



2ம் ஆண்டு

## நினைவஞ்சலி

அமரர்

## பழனி சிறிதரன்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 30.09.1964 | 26.09.2022 |

எங்களை ஏன் பிரிந்தீர்கள் அப்பா...
உங்களை தினமும் தேடுகிறோம்
எங்களிடம் வாருங்கள்
என்றென்றும் எங்களை வழிநடத்த
வணங்குகிறோம்.

கல்லடி, தும்பளை வீதி,
பருத்தித்துறை.

நீங்கா நினைவில்...
குடும்பத்தினர்

(C-1254)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகளவு வாக்குகள் நிராகரிப்பு

## ஆராயவுள்ள தேர்தல்கள் ஆணைக்குழு

**(கொழும்பு)**

**நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் நிராகரிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை அதிகரித்தமை தொடர்பில் ஆராயப்படவுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.**

2019ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ஒரு இலட்சத்து 35 ஆயிரத்து 452 வாக்குகள் நிராகரிக்கப்பட்டிருந்தன.

இந்த எண்ணிக்கை அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளில் 0.85 சதவீதமாகப் பதிவாகியிருந்தது.

எனினும் கடந்த 21ஆம் திகதி நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளில் 3 இலட்சத்து 300 வாக்குகள் நிராகரிக்கப்பட்டிருந்தன.

இது அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளில் 2.24 சதவீதமாகப் பதிவாகியுள்ளது.

எனவே, இந்த முறை அதிகளவான வாக்குகள் நிராகரிக்கப்பட்டமைக்கான காரணத்தை, குறித்த ஆய்வின் பின்னர் கண்டறிய முடியும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (நி)

## கிழக்கு ஆளுநராக ஜயந்தலால் ரத்னசேகர



(மட்டக்களப்பு)


பேராசிரியர் ஜயந்தலால் ரத்னசேகர கிழக்கு மாகாண ஆளுநராக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளார்.

கிழக்கு மாகாணத்தின் முன்னாள் ஆளுநர் பதவி விலகியதை தொடர்ந்து குறித்த பதவிக்கு ஜயந்தலால் ரத்னசேகர ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை நாட்டின் புதிய ஜனாதிபதி தெரிவு செய்யப்பட்ட பின்னர் முன்னாள் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஆளுநர்கள் அண்மையில் பதவி விலகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

## தேங்காய், தே.எண்ணெய் விலை அதிகரிப்பு

### கடும் சிரமத்தில் நுகர்வோர்



(கொழும்பு)

சில பிரதேசங்களில் தேங்காய் ஒன்றின் விலை 150 ரூபாய் வரை உயர்ந்துள்ளதுடன், இதன் காரணமாக நுகர்வோர் மற்றும் உணவக உரிமையாளர்கள் கடும் சிரமத்திற்கு உள்ளாகியுள்ளனர்.

சாதாரண அளவுள்ள தேங்காய் 120 ரூபாயில் இருந்து 137 ரூபாயாக உயர்ந்துள்ளது.

400 முதல் 420 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்ட சாதாரண தர தேங்காய் எண்ணெய் போத்தல் ஒன்றின் விலை 560 முதல் 600 ரூபாய் வரை அதிகரித்துள்ளது.

தேங்காய், தேங்காய் எண்ணெய் விலை அதிகரிப்பால் அரச நிறுவனங்கள் மற்றும் வைத்தியசாலைகளுக்கு கட்டுப்பாடான விலையில் உணவு வழங்கும் வியாபாரிகள் உணவு தயாரிப்பதில் பெரும் செலவுகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

தேங்காயின் கையிருப்பு குறைவினால் தேங்காய் விலை உயர்வடைந்துள்ளதாக இலங்கை ஒருங்கிணைந்த விசேட பொருளாதார நிலையங்கள் மற்றும் மெனிங் வர்த்தக சங்கத்தின் தேசிய அமைப்பாளர் எச்.எம்.எம். உபசேனா தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் போதியளவு தேங்காய் கையிருப்பு கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் இதனால் எதிர்காலத்தில் தேங்காய் விலை குறையலாம் எனவும் அவர் தெரிவித்தார்.(நி)

## ஜனாதிபதி, பிரதமருக்கு உலகத் தமிழர் பேரவை வாழ்த்து



(கொழும்பு)

இலங்கையின் 9ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள அநுரகுமார திஸாநாயக்கவிற்கு உலகத் தமிழர் பேரவை வாழ்த்து தெரிவித்துள்ளது.

இந்த விடயம் குறித்து உலகத் தமிழர் பேரவை நேற்று முன்தினம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

சிறுபான்மை மக்களின் நீண்டகாலக் குறைகளை நிவர்த்தி செய்வதற்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நடவடிக்கைகளை மேற்கொள்வார் என உலகத் தமிழர் பேரவை நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

தாழ்மையான பூர்வீகத்திலிருந்து தொடங்கி இன்று ஜனாதிபதியாகத் தெரிவாகியுள்ள அநுரகுமார திஸாநாயக்கவின் சாதனை இளைஞர்கள் மத்தியில் புதிய உத்வேகத்தை அளிக்கும் எனவும் உலகத் தமிழர் பேரவை குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை இலங்கையின் புதிய பிரதமராக நியமிக்கப்பட்டுள்ள கலாநிதி ஹரிணி அமரசூரியவுக்கும் உலகத் தமிழர் பேரவை வாழ்த்து தெரிவித்துள்ளது.



பல நாடுகளுக்கு முன்னுதாரணமாகத் தேர்தல் மற்றும் அதிகாரப் பரிமாற்றம் ஆகிய இரண்டும் அமைதியாக நடந்ததில் உலகத் தமிழர் பேரவை மகிழ்ச்சி அடைவதுடன் இந்தத் தேர்தல் பிரசாரம் பெரும்பாலும் இன மற்றும் மத பேரினவாதப் பேச்சுக்கள் இல்லாதது என்பதையும் நாங்கள் ஒப்புக்கொள்கிறோம் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி)

## முன்னாள் அமைச்சர்களின் வாகனங்கள் மாயம்

(கொழும்பு)

புதிய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் பணிப்புரைக்கமைய கையளிக்கப்பட்ட முன்னாள் அமைச்சர்கள் பயன்படுத்திய வாகனங்களில் சில மாயமாகியுள்ளதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

இலங்கையின் 9 ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக அநுரகுமார திஸாநாயக்க பதவியேற்றதன் பின்னர் முன்னாள் அமைச்சரவையின் அமைச்சர்கள் பயன்படுத்திய வாகனங்களைக் கையளிக்குமாறு பணிப்புரை விடுத்திருந்தார்.

இந்நிலையில், குறித்த பணிப்புரைக்கமைய கையளிக்கப்பட்டிருந்த முன்னாள் அமைச்சரவையின் அமைச்சர்கள் பயன்படுத்திய வாகனங்களின் எண்ணிக்கை குறைவாகக் காணப்பட்டுள்ளன.

இதனையடுத்து, மாயமான முன்னாள் அமைச்சரவையின் அமைச்சர்கள் பயன்படுத்திய வாகனங்கள் தொடர்பில் ஜனாதிபதி நடவடிக்கை எடுக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (நி)

## இந்திய உதவித் திட்டத்தின் கீழ்

### யாழ்.பல்கலைக்கழக மாணவர்களுக்கு நன்கொடை

(யாழ்ப்பாணம்)

இலங்கையின் வடக்கு - கிழக்கு பிராந்திய பல்கலைக்கழகங்களில் பயிலும் பொருளாதார ரீதியில் பின்தங்கிய மாணவர்களுக்கு இந்திய அரசாங்கத்தினால் வழங்கப்படும் கல்விக்கான நிதியுதவித் திட்டத்தின் கீழ், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கான புலமைப் பரிசில் உதவித் தொகை வழங்கும் நிகழ்வு நேற்று புதன் கிழமை இடம்பெற்றது.



இந்திய அரசாங்கத்தின் உதவித் திட்டத்தின் கீழ், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் அனைத்துப் பீடங்களிலும் இருந்தும் சுமார் 100 மாணவர்கள் இதற்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இத்திட்டத்துக்கான ரூபா 30 இலட்சம் இன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தரிடம் கையளிக்கப்பட்டது. யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துதரகத்தின் துணைத்துதுவர் ஸ்ரீசாய் முரளி இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உதவித் தொகைக்கான காசோலையைக் கையளித்தார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## டெஸ்ட் சம்பியன்ஷிப் தரவரிசையில்
# இந்திய அணி ஆதிக்கம்





சென்னை சேப்பாக்கத்தில் பங்களாதேஷ் அணியை வீழ்த்தி உலக டெஸ்ட் சம்பியன்ஷிப்-2023. 25 புள்ளிகள் பட்டியலில் முதலிடத்தை இந்திய அணி தக்க வைத்துள்ளது.

சேப்பாகம் டெஸ்ட் போட்டிக்கு பிறகு ஐ.சி.சியின் உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் புள்ளிகள் பட்டியலில் 86 புள்ளிகள் மட்டும் 71.67 சதவீதத்துடன் இந்தியா முதலிடத்தில் நீடிக்கிறது. 62.50 சதவீதத்தை இரண்டாம் இடத்தில் நடப்பு சம்பியனான அவுஸ்திரேலியா உள்ளது.

நியூஸிலாந்து, இலங்கை, இங்கிலாந்து, பங்களாதேஷ், தென்ஆபிரிக்கா, பாகிஸ்தான், மேற்கிந்திய தீவுகள் அணிகள் உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் பட்டியலில் அடுத்தடுத்த இடங்களிலும் நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் இலங்கை வெற்றி பெற்றதன் பின் உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் புள்ளிப்பட்டியலில் மூன்றாமிடத்துக்கு முன்னேறியுள்ளது.

நியூசிலாந்துக்கு எதிராக வெற்றி பெற்ற இலங்கை (50.00 சதவீதம்) ஒரு இடம் உயர்ந்து 3 ஆவது இடத்திற்கும் தோல்வியை சந்தித்த நியூசிலாந்து (42.86 சதவீதம்) ஒரு இடம் சரிந்து 4 ஆவது இடத்திற்கு சென்றுள்ளது. 5ஆவது இடத்தில் இங்கிலாந்தும் (42.19 சதவீதம்), 6 ஆவது இடத்தில் பங்களாதேஷும் (39.29 சதவீதம்) உள்ளன. 7 முதல் 9 இடங்களில் முறையே தென்னாபிரிக்கா (38.89 சதவீதம்), பாகிஸ்தான் (19.05 சதவீதம்), மேற்கிந்திய தீவுகள் அணி (18.52 சதவீதம்) அணிகள் உள்ளன.(6)

# ஆஸியின் தொடர் வெற்றிக்கு செக் வைத்த இங்கிலாந்து




அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான நேற்றைய மூன்றாவது ஒரு நாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் இங்கிலாந்து அணி டக்வத் லூயிஸ் முறைப்படி 46 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 304 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

தொடர்ந்து இங்கிலாந்து அணி பதிலளித்தாடி வந்த நிலையில் மழை குறுக்கிட்டதால் டக்வத் லூயிஸ் முறைப் படி இங்கிலாந்து அணிக்கு 209 ஓட்டங்கள் வெற்றியிலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

எனினும் மழை குறுக்கிடுவதற்கு முன்னர் 37.4 ஓவர்கள் நிறை வில் 4 விக்கெட்டுக்களை இழந்து 254 ஓட்டங்களைப் பெற்றிருந்த இங்கிலாந்து அணி 46 ஓட்டங்களால் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் 348 நாட்களுக்குப் பின்னர் அவுஸ்திரேலிய அணி ஒரு நாள் சர்வதேச கிரிக் கெட் போட்டியில் தனது முதலாவது தோல்வியினை சந்தித்துள்ளது.

அவுஸ்திரேலிய அணி இறுதியாக விளையாடிய 14 போட்டிகளிலும் எதிரணியை வீழ்த்தி வெற்றி பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (6)




### சஞ்சீவ்

அடடா ராமுவா, ஆள் அடையாளமே தெரியலையே?



அடையாளமே தெரியாதப்போ நான் ராமுன்னு எப்படி கண்டுபிடித்தாய்?

### ரிகானா

ஏன்டி நேற்று பையனை போட்டு அப்படி அடிச்ச?



நல்லா படிச்சு வேலைக்கு போனா உனக்கு நல்ல பொண்டாட்டி கிடைப்பாக என்று சொன்னதுக்கு அப்பா ஏம்மா நல்ல படிக்கல? என்று கேட்கிறான்

### மெல்வின்

இவ்வுலக வாழ்க்கை மூன்று நாள்
1. நேற்று வாழ்ந்தோம் அது திரும்ப வராது



2. இன்று வாழ்கிறோம் அது நிரந்தரம் இல்லை
3. நாளை நாங்கள் எங்கே இருப்போம் என்று எங்களுக்கு தெரியாது...

### சாந்தா

எதுவுமே புரியாத போது வாழ்க்கை தொடங்குகிறது



எல்லாம் புரிந்த போது வாழ்க்கை முடிகிறது

### சர்வின்



அந்த நாள் ஞாபகம் நெஞ்சிலே
வந்ததே நண்பனே நண்பனே நண்பனே
இந்த நாள் அன்று போல் இன்பமாய்
இல்லையே அது ஏன் ஏன் ஏன் நண்பனே
நடுவுல கல்யாணம் ஆயிடுச்சுல்ல பிரதர்

### கீதா

ஒருத்தர் மாதிரி ஏழு பேர் அருப்பாங்களேமே அதுக்கென்னயா இப்ப?



இல்ல மற்ற ஆறு பேருக்காவது நல்ல மனைவியா அமைஞ்சிருக்கிறாங்களா என்று பார்க்கலாம் என்ற ஆசை

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் [illegible] facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லெபனான் இலங்கையருக்கு உதவ துரித தொலைபேசி இலக்கங்கள்

(பெய்ரூட்)

லெபனானுக்கும் இஸ்ரேலுக்குமிடையிலான முரண்பாடு அதிகரித்து வரும் நிலையில் அங்குள்ள இலங்கையர்களுக்கு உதவும் வகையில் துரித தொலைபேசி இலக்கங்களை அந்த நாட்டிலுள்ள இலங்கைத் தூதரகம் அறிமுகப்படுத்தியுள்ளது.

லெபனானின் தெற்கு மற்றும் கிழக்கு பிரதேசங்களில் இஸ்ரேல் தொடர்ச்சியாகத் தாக்குதல் நடத்தி வரும் நிலையில், இதனால் 558 பேர் கொல்லப்பட்டுள்ளதோடு, சுமார் 1500 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால், லெபனானில் தற்போது பெரும் பதற்றமானதொரு சூழல் நீடித்து வரும் நிலையில், அங்குள்ள இலங்கையர்களுக்கு உதவும் வகையில் துரித தொலைபேசி இலக்கங்களை அந்த நாட்டிலுள்ள இலங்கைத் தூதரகம் அறிமுகப்படுத்தியுள்ளது.

அதற்கிணங்க, 009 617 038 6754 , 009 618 154 9162 என்ற தொலைபேசி இலக்கங்களை தூதரகம் அறிமுகம் செய்துள்ளது.

மேலும், மொழிபெயர்ப்பாளருக்கான தொலைபேசி இலக்கமாக 009 618 136 3894 எனும் இலக்கமும் லெபனானில் உள்ள இலங்கைத் தூதரகத்தினால் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. (நி)

## மதுபான விற்பனை லைசன்ஸ்கள் உடனடியாக இரத்து



(கொழும்பு)

மதுபான விற்பனை அனுமதிப் பத்திரங்களை இரத்து செய்யுமாறு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க உத்தர விட்டுள்ளார்.

ரணில் ஆட்சியின் இறுதிக்கால கட்டத்தில் வழங்கப்பட்ட மதுபான விற்பனை அனுமதிப்பத்திரங்களை உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இரத்துச் செய்ய அவர் உத்தரவிட்டுள்ளார். (நி)

## கடவுச் சீட்டு பிரச்சினைக்கு விரைவில் தீர்வு விஜித ஹேரத்

(கொழும்பு)

நாட்டில் பாரிய பிரச்சினையாக மாறியுள்ள கடவுச்சீட்டு பிரச்சினையை விரைவில் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சில் தமது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துரைத்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஏற்கனவே இந்த விடயம் தொடர்பில் உரியத் தரப்பினருடன் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இதற்கமைய, எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 15 அல்லது 16 ஆம் திகதிக்குள் இந்த வரிசைகளை இல்லாமல் செய்ய முடியும் எனவும் புதிய கடவுச் சீட்டு முறைமையை அறிமுகப்படுத்த முடியும் எனவும் எமக்கு உறுதியளிக்கப்பட்டுள்ளது.

குறித்த காலப்பகுதிக்குள் அந்தப் பணிகளை நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

அதே போன்று தற்போது ஏற்பட்டுள்ள கடவுச்சீட்டு வரிசை



இல்லாமல் செய்வதற்கான திட்டங்களும் மேற்கொள்ளப்படும் என அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார். (நி)


## கூட்டுறவாளர் வீரசிங்கம் கட்டடத்தொகுதி மூன்றாம் மாடி வாடகைக்கு வழங்குதல்

வீரசிங்கம் கட்டடத் தொகுதியின் மூன்றாம் மாடி வாடகைக்கு வழங்கப்படும். 3150 சதுர அடி விஸ்தீரணம் கொண்டது. 02 அறைகள், 02 பகுதியாக்கப்பட்ட நிர்வாக அறைகள் மலசலகூடம் , மின்சாரம், நீர்விநியோக வசதிகள் கொண்டது. பாரிய அலுவலகங்கள் நடத்தக் கூடிய தள அமைப்பைக் கொண்டது.

❖ பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களுக்கு மட்டும் வாடகைக்கு வழங்கப்படும்.

**விண்ணப்பப் படிவத்தையும், விபரத்தையும் அலுவலக நேரத்தில் ரூபா 100/= செலுத்தி சபையில் பெற்று 15.10.2024 ஆம் திகதிக்கு முன்னதாக கூறுவிலையை சமர்ப்பிக்கவும்.**

(அலுவலக நேரத்தில் கட்டடத்தை பார்வையிட முடியும்)

**தொடர்பு- செயலாளர், யாழ் மாவட்டக் கூட்டுறவுச் சபை, வீரசிங்கம் கட்டடத் தொகுதி 2 ஆம் மாடி, இல12, கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2324**

(சி-1253)


## இலங்கையின் உள்விவகாரங்களில் தலையிடாது பணியாற்ற தயார்-சீனா அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் நிலையான பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தியின் போது அதன் உள்விவகாரங்களில் தலையிடாத கொள்கைகளைக் கடைப்பிடித்து, இறையாண்மைக்கு மதிப்பளித்து, ஆக்கப்பூர்வமான பங்கை ஆற்றுவதற்கு தயாராக இருப்பதாக சீனா தெரிவித்துள்ளது.

செய்தியாளர் சந்திப் பொன்றில் இலங்கையின் புதிய ஜனாதிபதித் தெரிவு தொடர்பில் கருத்து வெளியிடுகையில் சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் லின் ஜியான் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

புதிய அபிவிருத்தி உத்திகளுடன் அதிக ஒருங்கிணைப்பை உருவாக்குவதற்கு இலங்கையின் புதிய ஜனாதிபதி மற்றும் அவரது புதிய நிர்வாகத்துடன் இணைந்து பணியாற்ற சீனா தயாராக உள்ளதாகவும் நேர்மையான பரஸ்பர உதவி மற்றும் நிலையான நட்பின் அடிப்படையில் எங்களது மூலோபாய கூட்டுறவு பங்காளித்துவத்தின் புதிய முன்னேற்றத்திற்கு பாடுபடுவோம் என வும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (நி)

# இராசிபலன்

26.09.2024
புரட்டாதி 10, வியாழக்கிழமை
நவமி பிற்பகல் 5.24 மணிவரை

புனர்பூசம் 4.38 மணிவரை
சுபநேரம் 7.32-9.02 மணிவரை
இராகுகாலம் 1.32- 3.02 மணிவரை

சந்திராஷ்டமம்- அனுசம்

வளவன்




ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், உறவினர்கள் உங்கள் நலனில் அக்கறை காட்டுவர், செய்தொழில் மேன்மையுண்டு, வம்பு வழக்குகளைச் சமாளித்து வளம் காணும் நாள்.




பணப்புளக்கம் அதிகரித்தாலும் அடுத்தடுத்த செலவுகளால் திணறுவீர்கள், அன்றாட பணிகள் நடைபெற ஆண்டவனைப் பிரார்த்திப்பீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும்.




விட்டுப் போன உறவுகள் மீண்டும் வந்து சேரலாம், எதிர்பாராத சம்பவங்கள் இடம் பெறும் வாய்ப்புண்டு, விடா முயற்சிக்கு வெற்றி கிடைக்கும், பயணங்கள் கைகூடும்.




கடமையில் கண்ணும் கருத்துமாய் இருப்பீர்கள், தேவைகள் பூர்த்தியாகும் வாய்ப்புண்டு, கடன் பிரச்சினைகளை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள்.




வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, காலை நேரத்திலேயே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள்.





பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், அந்நிய தேசத் தொடர்புகள் அனுகூலம் தரும், கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், கௌரவமான நாள்.





நிதானத்துடன் நடந்து நிம்மதி காண வேண்டிய நாள், வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள், வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம்.





பிள்ளைகளின் வளர்ச்சி கண்டு பெருமையடையும் நாள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பிரிந்தவர்கள் இணையும் வாய்ப்புண்டு.





நண்பர்களுடன் சேர்ந்து வெளியிடங்களுக்குச் செல்லும் எண்ணம் உருவாகும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், போசன சுகமுண்டு.




உங்களின் திறமைகள் வெளிப்படும் நாள், அரைகுறையாக இருந்த காரியங்களை இன்று செய்து முடிப்பீர்கள், நிலையான வருமானத்திற்கு வழியமைத்துக் கொள்வீர்கள்.




வராத உறவினர்கள் உங்கள் வீடுளுக்கு திடீரென வரலாம், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம், அன்பு நண்பர்களின் ... நாள்




உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைத்து உற்சாகமடைவீர்கள், பேச்சில் கனிவு பிறக்கும், வாகன சுகமுண்டு, புதிய முயற்சிகளில் ஆர்வம் கூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எளிதாக கிடைத்த பொருளுக்கு சரியான மதிப்பு இருக்காது.**

## பல்கலையில் பொன்விழா நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தின் பொன்விழா ஆண்டு நிகழ்வுகளின் வரிசையாக உலக சுற்றுலா தினத்தினை "சுற்றுலாவும் அமைதியும்" என்ற தொனிப்பொருளில் இந்தியாவின் பாண்டிச்சேரி பல்கலைக்கழகத்துடன் இணைந்து சிறப்பிக்கும் முகமாக நாளை தொடக்கம் 29 ஆம் திகதி வரை காலை 10 மணி தொடக்கம் இரவு 9 மணிவரை உணவு மற்றும் கைப்பணிப் பொருள் சந்தை, கலாசாரத் திருவிழா, மாணவர்களின் உணவுச் சந்தை போன்றன யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெறவுள்ளது.

1 ஆம் நாள் நிகழ்வில் "சுற்றுலாவும் அமைதியும்" என்ற தொனிப்பொருளில் ஆய்வரங்கும், 2 ஆம் நாள் நிகழ்வாக இலங்கை மற்றும் இந்தியாவில் இருந்து வருகை தந்த பேராசிரியர்களால் வடமாகாண சுற்றுலா மற்றும் தொழில்துறை அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான தொழில் திறன் மேம்படுத்தல் செயலமர்வுகள் மற்றும் 3 ஆம் நாள் நிகழ்வுகளாக கலை நிகழ்வுகளும் பண்பாட்டு அமர்வுகளும் இடம்பெறவுள்ளன.

அதே வேளை சிறிய நடுத்தர முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் வகையில் கண்காட்சிகளும் சந்தையும் நடைபெற உள்ளன. (6-33)

# அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் பொதுத்தேர்தலில் போட்டியிடலாம்

## தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிப்பு

(கொழும்பு)

அங்கீகரிக்கப்பட்ட 84 அரசியல் கட்சிகள் எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிட முடியும் எனத் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இது தவிர, சுயேட்சை குழுக்கள் சார்பிலும் வேட்பாளர்கள் இந்தத் தேர்தலில் போட்டியிட முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேநேரம், ஒரு கட்சியின் சார்பில் மாவட்ட ரீதியில் போட்டியிடக்கூடிய வேட்பாளர்கள் எண்ணிக்கை தொடர்பில், எதிர்வரும் நாட்களில் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிக்கும். விகிதாசார முறைமையூடாக பொதுத் தேர்தல் நடத்தப்படும் எனவும் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க குறிப்பிடுள்ளார். (நி)

## இருபாலையில் கால போகக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இருபாலை தெற்கு கமக்கார அமைப்பின் புதிய நிர்வாகத் தெரிவும் நெற்செய்கையாளர்களுக்கான வருடாந்த கால போகக் கூட்டமும் இன்று பிற்பகல் 2 மணிக்கு இருபாலை தெற்கு பொது நோக்கு மண்டபத்தில் த.தர்ஷன் தலைமையில் நடைபெறவுள்ளது. (6)

# 4 கிலோ கஞ்சாவுடன் ஆனையிறவில் இருவர் கைது

(முறிகண்டி)


கிளிநொச்சி பளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஆனையிறவு பகுதியில் நேற்று முன்தினம் இரவு மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது 4 கிலோ கஞ்சாவுடன் இருவர் கைதாகியுள்ளனர்.

மோட்டார் சைக்கிள் ஒன்றில் பயணித்த குறித்த இரு வரையும் சோதனை மேற் கொண்ட போதே கஞ்சா மீட் கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கஞ்சாவை கடத்திய 18 மற்றும் 25 வயதுடைய இளைஞர்கள் இருவர் கைது செய்யப்பட்டு பளை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

சம்பவத்தில் முல்லைத்தீவு மாவட்டத்தின் திருமுறிகண்டி பிரதேசத்தை சேர்ந்த் இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பில் பளை பொலிஸார் விசாரணை மேற் கொண்டு வருகின்றனர். (6-100)

# சைகை மொழி பயிற்சி பூர்த்தி சான்றிதழ்கள் வழங்கிவைப்பு



(யாழ்ப்பாணம்)

சைகைமொழிப் பயிற்சி மற்றும் உளவியல் பாட நெறியை நிறைவு செய்த யாழ்.பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று புதன் கிழமை யாழ். பிரதேச செயலக மாநாட்டு மண்ட பத்தில் பிரதேச செயலாளர் எஸ்.சுதர்சன் தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில், வடக்கு மாகாண பிரதம செயலாளர் இ.இளங்கோவன், வளவாளர் கலாநிதி நா.விஜிதா, பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர். இதன்போது சைகை மொழிப் பயிற்சியை நிறைவு செய்த பிரதேச செயலக உத்தியோகத்தர்களின் விழிப்புணர்வு நாடகம் மற்றும் நிகழ்வுகளும் இடம்பெற்றது. (6-33)

# ரயில் சேவைகள் மீள ஆரம்பிக்க காலதாமதமாகும்

## ரயில்வே திணைக்களம்

(கொழும்பு)

வடக்கு ரயில் மார்க்கத்தில் ரயில்களை இயக்குவது தொடர்பாக அமைச்சர் மற்றும் செயலாளருடன் கலந்துரையாடியதன் பின்னர் அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

மஹவ மற்றும் அனுராதபுரத்திற்கு இடையிலான ரயில் மார்க்கப் பகுதி நவீனமயமாக்கல் காரணமாக மூடப்பட்டிருந்தது.ஜனாதிபதித் தேர்தல் காரணமாக தேர்தல் கடமைகளுக்காக வரும் உத்தியோகத்தர்களுக்கும் கிராமங்களுக்குச் செல்லும் மக்களுக்கும் போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக் கில் அந்த மார்க்கம் மீண்டும் திறக்கப்பட்டது. எனினும் குறித்த மார்க்கத்தில் வழ மையாக ரயில் சேவை களை முன் னெடுப்பதில் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித் துள்ளது.ரயில் மார்க்கத்தின் சமிஞ்ஞை அமைப்பை நவீனப் படுத்துவதற்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்ட போதிலும் அதற்கான ஏற்பாடுகள் அங்கீ கரிக்கப்படாததே இதற்குக் காரணம் என ரயில்வே திணைக்களத்தின் சிரேஷ்ட பேச்சாளர் ஒரு வர் தெரிவித்தார். எவ்வாறாயினும், சமிஞ்ஞை அமைப்பு நவீனமயப்படுத்தி மீண்டும் ரயில் சேவைகளை ஆரம்பிக்க 4 மாதங்களுக்கும் மேலாகும் என ரயில்வே திணைக்களத்தின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (6)

## பகிரங்க ஏல விற்பனை

(யாழ்ப்பாணம்)

யாழ். நீதிவான் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்டதும் உரிமை கோரப்படாததுமான துவிச்சக்கர வண்டிகள், தொலைக்காட்சி, தண்ணீ மோட்டர் என்பன நாளை மறுதினம் சனிக் கிழமை காலை 9 மணிக்கு பகிரங்க ஏலத்தில் நீதிமன்ற வளாகத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன என யாழ். நீதவான் நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (6)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | நெல்லியடி ரூபா | நெல்லியடி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 180 | 200 | 150 | 140-160 | 100 |
| உருளைக்கிழங்கு | 180 | 190 | 180 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 250 | 180 | 200 | 200 | 350 |
| தக்காளி | 200 | 200 | 180 | 200 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 250 | 220 | 150-250 | 200 |
| கோவா | 250 | 300 | 300 | 270 | 400 |
| கரட் | 250 | 300 | 300 | 250 | 300 |
| பூசணி | 80 | 60 | 80 | 60 | 100 |
| புடோல் | 60 | 140 | 120 | 100 | 300 |
| வாழைக்காய் | 150 | 200 | 200 | 200-250 | 320 |
| சின்ன வெங்காயம் | 320 | 300 | 250 | 150-300 | 300 |
| பெரிய வெங்காயம் | 350 | 200 | 300 | 280 | 250 |
| பாகற்காய் | 300 | 400 | 400 | 300-350 | 500 |
| வெண்டக்காய் | 80 | 100 | 100 | 150 | 200 |
| கருணைக் கிழங்கு | 100 | 150 | 200 | 150 | 200 |
| பயற்றங்காய் | 350 | 320 | 300 | 150-200 | 400 |
| லீக்ஸ் | 320 | 440 | 400 | 300 | 400 |
| பீற்றூட் | 100 | 120 | 180 | 80-140 | 240 |
| கறிமிளகாய் | 400 | 500 | 600 | 400 | 600 |
| முருங்கைக்காய் | 800 | 750 | 700 | 400-500 | 800 |
| போஞ்சி | 400 | 400 | 500 | 280 | 600 |
| கத்தரிதம்புள்ள | 150 | 150 | 200 | -- | 80 |
| கீரை - 1 பிடி | 130 | 100 | 80 | 70 | 120 |
| தேசிக்காய் | 400 | 350 | 400 | 450-500 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 130 | 140 | 130 | 80-140 | 100-140 |
| இராசவள்ளி | -- | 900 | 650 | 600 | 1200 |
| வெங்காயப்பூ | 350 | 400 | 400 | -- | 400 |
| முள்ளங்கி | 120 | 120 | 150 | 90 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 60 | 100 | 80 | 60 |
| வல்லாரை | 60 | 30 | 80 | 100 | 100 |
| ஈரப்பலா | 100 | -- | 100 | 70 | 150 |

# 50 மில்லியன் பெறுமதியான மருத்துவ உபகரணங்கள் கையளிப்பு



(யாழ்ப்பாணம்)

அவுஸ்திரேலிய மருத்துவ உதவி நிறுவனத்தினால் யாழ். போதனா வைத்தியசாலைக்கு 50 மில்லியன் ரூபாய் பெறுமதியான மருத்துவ உபகரணங்கள் நேற்று முன்தினம் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

அவுஸ் திரேலியாவில் இருந்து மருத்துவ உதவி நிறுவனத்தின் ஒழுங்குபடுத்தலில் அண்மையில் 50 மில்லியன் ரூபாய் பெறுமதியான பல்வேறு உபகரணத் தொகுதிகளே இவ்வாறு யாழ். போதனா வைத்தியசாலையின் பயன்பாட்டிற்கு கையளிக்கப்பட்டுள்ளது. (6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆர்ப்பாட்டங்களை நடத்துவதற்கு தடை!

## பிரதிப் பொலிஸ்மா அதிபர்

(கொழும்பு)

**நாட்டில் இந்த வாரம் ஆர்ப்பாட்டங்களை நடத்துவது முற்றாக தடை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் நிஹால் தல்துவ அறிவித்துள்ளார்.**



அத்துடன் தேர்தல் சட்டத்தை தொடர்ந்தும் கடைப்பிடிக்குமாறு அவர் பொது மக்களை கேட்டுக்கொண்டுள்ளார்.

இதேவேளை யாரையும் துன்புறுத்தாமல் தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்துமாறும் வேண்டுகோள் விடுத்துள்ள அவர், குழுவாக கூடுவதை தவிர்க்க வேண்டும் எனவும் அறிவுறுத்தியுள்ளார். (நி)


வைத்தியம்

வலிப்பு நோய் | கை விறைப்பு |
கழுத்து வலி | கால் பாத விறைப்பு |
முள்ளந்தண்டு வலி | முழங்கால் வலி
Sciatica | நாட்பட்ட சளி |
தலைக்கு இரத்தம் போகாமை

அதி விசேட மூலிகை, Acu சிகிச்சைகள்
Dr R. சிவகுருநாதன் (SLAMC REGD)
தொடர்புகளுக்கு : 0777 301 669
(C-2439)


# விஜித ஹேரத்திற்கு வாழ்த்து தெரிவித்த ஜெய்சங்கர்





(கொழும்பு)

இலங்கையின் வெளி விவகார அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள விஜித ஹேரத்திற்கு இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் தனது வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.

இது குறித்து ஜெய்சங்கர் தனது எக்ஸ் பதிவில் நேற்று முன்தினம் இந்த விடயத்தினைக் குறிப்பிட்டுள்ளார்.

அந்த பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, "விஜித ஹேரத் இலங்கையின் வெளிவிவகார அமைச்சராக நியமிக்கப்பட்டதற்கு வாழ்த்துக்கள்.

நமது நாகரீக உறவுகளை வலுப்படுத்தவும் பாரம்பரியமாக நெருங்கிய நட்புறவை வலுப்படுத்தவும் இரு நாட்டு மக்களின் நலனுக்காக பன்முக ஒத்துழைப்பை விரிவுபடுத்தவும் உறுதிபூண்டுள்ளோம்" எனக் குறிப்பிட்டுள்ளார். (நி)


லங்கா மஹால் (PVT) LTD

உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை

அதிவிரைவாக குறைவான விலையில்
இலவசமாக உங்கள் வீடுகளுக்கே
வந்து பொதிகள் சேகரிக்கப்படும்.
நம்பகமான சேவை.
(366)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு :
00919566156719

Western Union, MoneyGram, Ria Money Transfer ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,
077 839 3974



# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1999 இந்து
நட்சத்திரம்: சதயம்
கி.பா: 12 1/2
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: A/L, France
எதிர்பார்ப்பு: PR உள்ளவர் (france)
தொ.இ: B/14797

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
கி.பா: 35
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: BA, ACCA, Accountant
எதிர்பார்ப்பு:அரசதொழில் or வெளிநாடு
தொ.இ: B/14798

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: A/L,Salesman
மனைவி இறந்துவிட்டார்
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/14907

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1998 இந்து
நட்சத்திரம்: அத்தம்
கி.பா: 71
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: Engineer, London
எதிர்பார்ப்பு: UK PR உள்ள ஆண்
தொ.இ: G/14746

பிறப்பு: 1997 இந்து
நட்சத்திரம்: சுவாதி
கி.பா:36 1/2
உயரம்: 5'2"
தகைமை/தொழில்:A/L, Computer Designer(pvt)
எதிர்பார்ப்பு: தகுதியான வரன்
தொ.இ: G/14781

பிறப்பு: 1997 இந்து
நட்சத்திரம்: விசாகம்
கி.பா: 55
உயரம்: 5'8'
தகைமை/தொழில்: BA (following)
எதிர்பார்ப்பு: உயர் பதவி
தொ.இ: G/14787

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# வட இலங்கைச் சங்கீத சபை

## பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோருதல்-2025

வட இலங்கைச் சங்கீத சபையின் 2025 ஆம் ஆண்டுக்கான தரம் 1, 2, 3, 4, 5, 6 ஆகிய தரங்களுக்கான விண்ணப்பப்படிவங்கள் 01.10.2024 ஆம் திகதி முதல் கோரப்படுகின்றன.

விண்ணப்பப்படிவம், அறிவுறுத்தல்களை வட இலங்கைச் சங்கீத சபையின் (www.ncomsjaffna.com) எனும் இணையத்தளத்தில் பதிவிறக்கம் செய்து விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பிப்பதற்கான முடிவுத் திகதி - 31.10.2024

(குறிப்பு:- 2024 ஆம் ஆண்டு நடைபெற்ற பரீட்சையில் சித்தியடைந்த பரீட்சார்த்திகளின் பெறுபேறுகளை எமது இணையத்தளத்தில் பார்வையிட முடியும்.)

திருமதி.ஜமுனா ராஜசீலன்
தலைவர், வட இலங்கைச் சங்கீத சபை,
மருதனார்மடம், சுன்னாகம்.

(C-1251)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## கருத்துக்கணிப்பில் கமலா ஹாரிஸ் முன்னிலை



(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் நவம்பர் 5ஆம் திகதி நடைபெறவுள்ளது.

ஆளும் கட்சி சார்பாக தற்போதைய துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸ் மற்றும் குடியரசு கட்சி சார்பாக டொனால்ட் ட்ரம்ப் இருவரும் போட்டியிடுகின்றனர்.

கமலா, ட்ரம்ப் இரு தரப்பினருமே தங்கள் தேர்தல் நடவடிக்கைகளில் மும்முரம் காட்டி வருகின்றனர்.

அதன்படி, அண்மையில் இருவரும் தொலைக்காட்சியில் நேரடி விவாதத்திலும் கலந்து கொண்டனர்.

ஜனாதிபதி வேட்பாளர்கள் இருவரில் மக்கள் மத்தியில் யாருக்கு கூடுதல் செல்வாக்கு உள்ளது என்பதை பரிசீலிக்க அவ்வப்போது கருத்துக் கணிப்பு நடத்தப்படும்.

ஏற்கனவே நடாத்தப்பட்ட கருத்துக் கணிப்பில் கமலா ஹாரிஸ் முன்னணி வகித்திருந்தார்.

அதன்படி சிகாகோ பல்கலைக்கழகம் சார்பாக நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பில் ட்ரம்ப்பை விட கமலா ஹாரிஸ் 38 புள்ளிகள் அதிகமாகப் பெற்று முன்னணியில் உள்ளார்.

ஆசிய மற்றும் அமெரிக்க வாக்காளர்களிடையே கமலா ஹாரிஸ் 38 சதவீத புள்ளிகள் முன்னிலை வகிக்கிறார்.

ஆசிய அமெரிக்க வாக்காளர்களில் 66 சதவீதமானோர் கமலா ஹாரிஸுக்கும் 28 சதவீதமானோர் ட்ரம்புக்கும் ஆதரவு தெரிவிக்கின்றனர்.

இன்னும் எதுவித முடிவுக்கும் வராதவர்கள் 6 சதவீதமானவர்கள்.


இவ்வாறிருக்க இந்த ஜனாதிபதித் தேர்தலில் தான் தோல்வி கண்டால், இதற்குப் பின் தேர்தலில் போட்டியிட மாட்டேன் என ட்ரம்ப் செய்தியாளர்களிடம் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

## ‘உக்ரைனை கைவிட மாட்டோம்’ ஐ.நா சபையில் பைடன் உறுதி

(ஜெனீவா)

ரஷ்யாவிற்கு எதிரான போரில் உக்ரைன் வெற்றி பெறும் வரை அந்நாட்டை கைவிட மாட்டோம் என அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் பொதுச் சபை கூட்டத்தில் அமெரிக்க ஜனாதிபதி பைடன் பேசியதாவது, முழு அளவில் போர் நடக்க வேண்டும் என்று யாரும் ஆசைப்படவில்லை. அப்படி ஒரு சூழ்நிலை ஏற்பட்டால் தூதரக ரீதியில் தீர்வு ஏற்படுத்தவும் ஒரு வாய்ப்பு உண்டு.



அமெரிக்கா, கட்டார் மற்றும் எகிப்து ஆகிய நாடுகளின் அமைதி ஒப்பந்தத்திற்கு விதிகளை வகுத்து காசாவில் அமைதியை ஏற்படுத்துவதுடன், பிணைக் கைதிகளை விடுவிக்க வேண்டும்.

புடின் நடத்தி வரும் போர் தோல்வியை சந்தித்து உள்ளது. உக்ரைனை அழிக்க வேண்டும் என அவர் நினைத்தார். ஆனால், அந்நாடு இன்னும் சுதந்திரமாக உள்ளது. இந்த விவகாரத்தில் நாங்கள் சோர்வடைய மாட்டோம். அந்நாட்டை விலக்கி பார்க்க முடியாது. உக்ரைன் வெல்லும் வரை, அந்நாட்டை கைவிட மாட்டோம்.

மத்திய கிழக்கு நாடுகளில் அமைதி ஏற்பட்டால், உலகம் வலுவான நிலையில் இருக்கும். பயங்கரவாதிகளுக்கு ஊக்கம் கிடைப்பதைத் தடுக்க வேண்டும்.

ஈரான் ஒரு போதும் அணு ஆயுதத்தை பெறாது என்பதை நாம் உறுதிபடுத்த வேண்டும் என அவர் தெரிவித்தார். (நி)

## புனித யாத்திரை எனும் பெயரில் யாசகம் கேட்கும் பாகிஸ்தானியர்கள்

### தடுத்து நிறுத்துமாறு அரபு அமீரகம் வலியுறுத்து

(அபுதாபி)

பொருளாதார ரீதியில் பாகிஸ்தான் பின் தங்கிய நிலையில் இருக்கிறது.

இதனால் தொழிலின்மை, அத்தியாவசியப் பொருட்களின் தட்டுப்பாடு என அந்நாட்டு மக்கள் பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

இதற்கிடையில் புனித யாத்திரைப் பயணம் செல்வதாக அனுமதி பெற்றுக்கொண்டு அரபு நாட்டுக்குச் செல்லும் பாகிஸ்தானியர்களில் பலர் அங்கே யாசகம் பெற்று வருவதாக குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன.

இவ்வாறு யாசகம் பெறும் பாகிஸ்தானியர்களை பிடித்து மீண்டும் பாகிஸ்தானுக்கு அனுப்பி வருகிறது அரபு அமீரகம்.

அரபு அமீரகத்தில் பிடிபட்ட யாசகர்களில் 90 சதவீதமானோர் பாகிஸ்தானைச் சேர்ந்தவர்கள் என அந்நாட்டின் வெளியுறவு அதிகாரி தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் புனித யாத்திரை எனும் பெயரில் தங்கள் நாட்டுக்குள் நுழைந்து யாசகம் பெறுவதை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என சவுதி ஹஜ் அமைச்சகம் பாகிஸ்தானின் மத விவகார அமைச்சகத்துக்கு கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)



## மொசா... முறி...

(டெல்அவில்) –

இஸ்ரேலின் புல... அமைப்பின் தலை... ஹிஸ்புல்லா அ... களை இடைமறி... இஸ்ரேலிய இராணு...

இஸ்ரேலிய தலைநகர் டெல் அவியில் உள்ள மொசாட் தலைமையகத்தினை இலக்குவைத்தே ஹிஸ்புல்லா அமைப்பு ஏவுகணை தாக்குதல்களை மேற்...

## நஷ்டத்... விமான ... ஏலம் விடு...



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் சர்வதேச விமான நிறுவனத்தை எதிர்வரும் ஒக்டோபர் 1 ஆம் திகதி ஏலம் விடுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நஷ்டத்தை ஈடுகட்ட 51% முதல் 100% வரை விமான நிறுவனங்களை விற்க அரசு திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

பாகிஸ்தானின் தேசிய விமான ...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாட் தலைமையகம் இலக்கு; ...றியடித்த இஸ்ரேல்

...ல்)

...புலனாய்வு பிரிவான மொசாட் தலைமையகத்தினை நோக்கி ... அமைப்பு செலுத்திய ஏவுகணை ...டமறித்து அழித்துள்ளதாக ...இராணுவம் தெரிவித்துள்ளது.





...கொண்டது என இஸ்ரேலிய இராணுவம் தெரிவித்துள்ளது.

இதேவேளை இஸ்ரேலிய தலைநகரை நோக்கி ஏவுகணை தாக்குதல்களை மேற்கொண்டதாக ஹிஸ்புல்லா அமைப்பு தெரிவித்துள்ளது.

காசா பள்ளத்தாக்கில் பாலஸ்தீனியர்களின் கௌரவமான துணிச்சலான எதிர்ப்பிற்கு ஆதரவாகவும் லெபனான் மக்களைப் பாதுகாப்பதற்காகவும் ஏவுகணை தாக்குதலை மேற்கொண்டதாக ஹிஸ்புல்லா அமைப்பு தெரிவித்துள்ளது. (நி)

## ...த்தை ஈடு செய்ய ...ன நிலையத்தை ...டும் பாகிஸ்தான்




...நிறுவன ஏலம் ஒக்டோபர் 1 ஆம் திகதி நடைபெறும் என்று தேசிய சட்டமன்ற தனியார் மயமாக்கல் குழுவின் தலைவர் அறிக்கையின் மூலம் தெரிவித்துள்ளார்.

மேலும், "பாகிஸ்தான் சர்வதேச விமான நிவறுனம் ஏலம் அடுத்த மாதம் 1 ஆம் திகதி இறுதி செய்யப்படும்" என்று தேசிய சட்டமன்ற உறுப்பினர் ஃபரூக் சத்தார் குழுவின் அமர்வில் தெரிவித்ததாக கூறப்படுகிறது.

சர்வதேச நாணய நிதியத்தால் வலியுறுத்தப்பட்ட சீர்திருத்தங்களின் ஒரு பகுதியாக, நஷ்டத்தில் இயங்கும் விமான நிறுவனத்தில் 51% முதல் 100% வரை விற்கப்படும் என்று பாகிஸ்தான் அரசு முன்பு கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது. (நி)

## பங்களாதேஷ் ஜனாதிபதியை எதிர்த்து அமெரிக்காவில் போராட்டம்

(வோஷிங்டன்)

பங்களாதேஷின் இடைக்கால அரசாங்கத்தை வழி நடத்திச் செல்லும் முஹம்மது யூனுஸ்க்கு எதிராக அமெரிக்காவின் நியூயோர்க்கில் போராட்டம் ஒன்று நடத்தப்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஐக்கிய நாடுகள் சபையின் 79 ஆவது பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக அமெரிக்கா சென்றுள்ள யூனுஸ் தங்கியுள்ள நியூயோர்க்கில் உள்ள ஹோட்டல் முன்பு பங்களாதேஷின் ஆதரவாளர்கள் குழு ஒன்று கூடியதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

யூனுஸை உடனடியாக அமெரிக்காவை விட்டு வெளியேறுமாறு கோரி அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளதாகவும் ஊடகச் செய்திகள் குறிப்பிடுகின்றன.

மேலும், பங்களாதேஷில் சிறுபான்மையினர் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக கூறப்படும் பங்களாதேஷின் இடைக்கால அரசாங்கத்தின் தலைமை ஆலோசகர் யூனுஸ்க்கு எதிராக போராட்டக்காரர்கள் கோஷங்களை எழுப்பியதாகவும், போராட்டக்காரர்கள் "ஷேக் ஹசீனா எங்கள் பிரதமர்" என்று சுவரொட்டிகளை ஏந்தியதாகவும் ஊடக அறிக்கை கூறுகிறது.

கடந்த ஆண்டு பங்களாதேஷில் நடந்த போராட்டங்களால் அப்போதைய பிரதமர் ஷேக் ஹசீனா நாட்டை விட்டு வெளியேறியதை அடுத்து, பாராளுமன்றம் கலைக்கப்பட்டதன் மூலம் அமைக்கப்பட்ட இடைக்கால அரசாங்கத்தின் தலைவராக யூனுஸ் ஒகஸ்ட் 8ஆம் திகதி பதவியேற்றார்.

ஆனால், 84 வயதான நோபல் பரிசு பெற்ற பிரதமர் யூனுஸ் "அழுக்காறு அரசியல்" மூலம் ஆட்சிக்கு வந்ததாக போராட்டக்காரர்கள் குற்றம் சாட்டியுள்ளனர். (நி)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகிம்சையின் அண்ணல் தியாக தீபம் திலீபன்



திலீபன் உலக வரலாற்றில் உயர்ந்து நிற்கும் ஓர் உன்னதத் தியாகி. தியாகம் என்றால் என்ன? அறவழிப் போரின் உச்சம் எவ்வாறு இருக்கும் என்பதை இந்த வையகத்திற்கு கற்பித்து காற்றோடு காற்றாய் கரைந்து போனவன் திலீபன்.

திலீபனின் தியாகத்தை இந்த உலகமே அண்ணார்ந்து பார்த்து வியந்து நிற்கிறது. ஆயினும் அவனின் தியாகத்தின் தீ இன்று வரை எரிந்து கொண்டு தான் இருக்கிறது.

ஈழத் தமிழினத்துக்காக நீர் கூட அருந்தாது நல்லூர் முன்றலில் பன்னிரண்டு நாட்களாய் பட்டினி கிடந்து தனது இன்னுயிரை ஈகம் செய்த அவனின் தவிப்பு, தனக்கு நீர் தரச்சொன்னதல்ல.

என் இனத்தின் பிணைக்கப்பட்ட கைவிலங்கை உடைத்தெறியச் சொன்னதே அவனின் இறுதி வரையான உச்சரிப்பு.

திலீபனின் உண்ணா நோன்பின் மகத்துவத்தை அறிந்து ஈழத்து அன்னையர்கள் நல்லூர் திருவீதியெங்கும் நிறைந்திருந்தனர். தம் மகனின் கோரிக்கை நிறைவேறாதா என ஒவ்வொரு நிமிடத்தையும் யுகமாய் கடந்து கொண்டிருந்தனர்.

தம் மகனின் கோரிக்கை கண்டு பெருமிதம் கொண்டாலும் நாட்கள் கடப்பதை உணர்ந்த ஈழத்து தந்தையரின் மனம் கரையத் தொடங்கியது.

தம் தோழன் திலீபனின் மன வலிமையை உரமாக்க ஈழத்து இளைஞர்கள் ஒன்று கூடி நெருப்புக் குழம்பாய் கொதித்துக் கொண்டிருந்தனர். தோழனின் கோரிக்கை நிறைவேறும் வரை அந்த இடத்தில் இருந்து அகல மாட்டோம் என உறுதி கொண்டனர்.

தம் சகோதரன் சாவின் விளிம்பில் படுத்துக் கிடப்பது கண்டு கண்ணீர் விட்டுக் கதறிக் கொண்டிருந்தனர் ஈழத்துத் தங்கையர். திலீபன் அவ்வாறு என்ன கோரிக்கையை முன் வைத்தான். வெறும் ஐந்தம்சக் கோரிக்கைகளே!

அதுவும் இந்திய தேசத்திடமே அவன் தனது கோரிக்கைகளை முன் வைத்தான்.

**திலீபனின் ஐந்து அம்சக் கோரிக்கைகளாவன...**



1.மீளக் குடியமர்த்தல் என்ற பெயரில் தமிழர் தாயகமான வடக்கு- கிழக்கில் மேற்கொள்ளப்படும் சிங்களக் குடியேற்றங்களை தடுத்து நிறுத்த வேண்டும்.

2.சிறைச்சாலைகள், இராணுவ முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் அனைவரும் உடன் விடுதலை செய்யப்பட வேண்டும்.

3.அவசரகாலச் சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும்.

4.ஊர்க்காவல் படையினருக்கு வழங்கப்பட்ட ஆயுதங்கள் அனைத்தும் முற்றாகக் களையப்பட வேண்டும்.

5.தமிழர் பிரதேசங்களில் புதிதாக பொலிஸ் நிலையங்கள் திறப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் முற்றாக நிறுத்தப்பட வேண்டும்.

தியாகத்தின் உன்னத நாடு இந்தியா.இந்தியா தன் தியாகப் போரை ஏற்று தமிழருக்கான தீர்வைப் பெற்றுத் தரும் என மலையாய் நம்பினான் திலீபன். ஆனால் நடந்ததோ வேறு மாதிரியாக அமைந்தது.

உலகத் தமிழினத்தின் வேண்டுகோள் அத்தனையும் பொய்த்துப் போனது.

தான் கொண்ட கொள்கையில் இருந்து சற்றும் பின்வாங்காத திலீபன் 1987 செப்ரெம்பர் 26 ஆம் திகதி காற்றோடு காற்றாய் கரைந்து போனான்.

அந்த நாள் உலக வரலாற்றின் கறுப்பு நாள். அகிம்சை தோற்றுப் போன கரிநாள். அகிம்சை நாடான இந்தியாவே அகிம்சையை சாகடித்த சகிக்க முடியாத நாள்.

திலீபனின் தியாகத்துக்கு எல்லையே இல்லை. பன்னிரண்டு நாட்கள் நீர் கூட அருந்தாமல் வெறும் 23 வயதே ஆன இளைஞன் உண்ணா நோன்பிருந்து மடிந்து போனான் எனின் அவனின் மனஉறுதி எப்பேற்பட்டது.

அவனின் தியாகம் எவ்வளவு உன்னதமானது.

திலீபன் மரணித்து 37 ஆண்டுகள் கடந்து விட்டன.ஆனால் அவனின் ஐந்தம்சக் கோரிக்கைகள் இன்றுவரை நிறைவேற்றப்படவில்லை.

ஆயுதவளிப் போரைத் துறந்து அறவழிப் போரைத் தொடுத்து ஐந்தம்சக் கோரிக்கையை முன் நிறுத்தி பசி கிடந்த அண்ணல் திலீபனை இந்திய அரசோ, இலங்கை அரசோ, சர்வதேசமோ கண்டு கொள்ளவில்லை.

திலீபன் மூட்டிய அகிம்சைத் தீ இன்றுவரை தமிழர் நெஞ்சங்களில் அணையாது எரிந்து கொண்டு தான் இருக்கிறது.


இதற்கு 37 ஆண்டுகள் கடந்தும் இன்றைய திலீபனின் உணர்வெளிச்சி தக்க சான்றாகும்.

அபிமன்யு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை முழுவதையும் சுற்றவுள்ள சிறுவன்

## கிளியில் ஆரம்பமான சாதனைப் பயணம்



(முறிகண்டி)

இலங்கை முழுவதையும் சுற்றிவரும் நடைபயணம் ஒன்றினைக் கிளிநொச்சி கோணாவில் பகுதியைச் சேர்ந்த 11 வயதுடைய முரளிதரன் பியோஜன் எனும் சிறுவன் நேற்று நடைபயணத்தை ஆரம்பித்திருந்தார்.

நேற்றுக் காலை 8.30 மணியளவில் கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயம் முன்பாக வழிபாடுகளை தொடர்ந்து சமயத் தலைவர்கள், பிரதேச மக்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்கள் ஆகியோர் இணைந்து ஆரம்பித்து வைத்த நடைபயணம் முல்லைத்தீவு நோக்கி நகர்ந்து சென்றிருந்தது. குறித்த நடைபயணத்தில் சிறுவனின் தந்தையும் இணைந்துள்ளார்.(6-100)

# ரூ.12 லட்சம் பெறுமதியான கேரள கஞ்சா மீட்பு

## ஒருவர் கைது



(மன்னார் )

மன்னார் தள்ளாடி இராணுவ புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் மன்னார் சிறப்பு அதிரடிப்படை அதிகாரிகளின் உளவுப் பிரிவினருடன் இணைந்து நடத்திய சுற்றிவளைப்பு தேடுதல் நடவடிக்கையின் போது 12 லட்சம் பெறுமதியான கேரள கஞ்சாவுடன் நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவமானது நேற்று முன்தினம் மாலை மாந்தை மேற்கு பிரதேசத்தில் உள்ள மூன்றாம் பிட்டிப் பகுதியில் இடம்பெற்றது.

குறித்த நபரால் விற்பனைக்காக பொதி செய்யப்பட்ட 3 கிலோ 570 கிராம் கேரள கஞ்சாவுடன் அவரது இல்லத்தில் வைத்து மீட்கப்பட்டுள்ளதுடன் அந் நபரும் கைதாகியிருந்தார்.

குறித்த சந்தேக நபர் மற்றும் சான்றுப் பொருட்கள் மேலதிக விசாரணைகளுக்காக இலுப்பைக்கடவை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.(6-285)

# 2,703 ஏக்கரில் பெரும்போக செய்கை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டம் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட தண்ணிமுறிப்பு, குமுழமுனை பெரும்போகச் செய்கை தொடர்பான கலந்துரையாடலானது குமுழமுனை கமநல அபிவிருத்தி நிலைய வளாகத்தில் நேற்று முன்தினம் நடை பெற்றது.

இந்த கூட்டத்தில் முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.குண பாலன் கலந்து சிறப்பித்ததுடன் இம்முறை பெரும்போக செய்கைக்காக 2,703 ஏக்கர் வயல்நிலம் அனைத்தும்பயிர்செய்வதற்கான அனுமதியையும் வழங்கியுள்ளார். இக் கலந்துரையாடலில் கரைதுறைப்பற்று உதவிப் பிரதேச செயலாளர் , உத்தியோகத்தர்கள் , விவசாயிகள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (6)

# அரசியல் கைதிகளை விடுவிக்க நடவடிக்கை எடுங்கள்

## அருட்தந்தை மா.சக்திவேல்

(நெளுக்குளம்)

மிக நீண்ட காலமாக சிறையில் வாடும் அரசியல் கைதிகளை அரசியல் தீர்மானம் எடுத்து விடுதலை செய்து உங்கள் நல்லெண்ண அடையாளத்தை வெளிப்படுத்துங்கள் என சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா.சக்திவேல் தெரிவித்துள்ளார்.

நேற்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையின் கடந்த கால அரசியல், பொருளாதார, அபிவிருத்தி, சமூக நலப் பொது சேவைகள் அது தொடர்பான கொள்கைகள், கட்டமைப்புகள் என்பவற்றோடு அரசியல் கலாசாரத்தையும் அரசியல் அரச இயந்திரத்தையும் "சுத்த கரண்ன ஓனே" "தூய்மைப் படுத்த வேண்டும்" எனும் மக்கள் விடுதலை முன்னணி தலைவரும் தேசிய மக்கள் சக்தியின் தலைவருமான அநுரகுமார திஸாநாயக்கவின் குரலைக் கேட்டு பெருந் தொகையான வாக்குகளால் மக்கள் அவரை நாட்டின் தலைவராக்கி கௌரவப்படுத்தியுள்ளனர்.

நாட்டின் அனைத்து மக்களின் ஜனாதிபதியான அவரை வாழ்த்துவதோடு கடந்த 75 வருட காலமாக அடக்கி ஒடுக்கப்பட்டு பல இன கலவரங்களுக்கும் இன அழிப்பிற்கும் இனப்படுகொலைக்கும் உள்ளாகி தொடர்ந்தும் இன அழிப்பினை அனுபவித்துக் கொண்டிருக்கிற தமிழர்களாகிய நாங்களும் கூறுகின்றோம் "தூய்மைப் படுத்த வேண்டும்" அதனையும் செவிமடுத்தால் ஒரே நாட்டில் இரு தேச மக்கள் அனைத்து வகையிலும் வளர்ச்சிக்கண்டு ஒரே மக்கள் சக்தியாக எம்மை அடிமைப்படுத்த நினைக்கும் வல்லரசுகளுக்கும் இணைந்தே முகம் கொடுக்க முடியும் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

(6-299)

# விபூதியின் பெருமை இறைவனோடு ஒன்று சேர்வதும், திருவருள் சேர்க்கும் சிவ சின்னம். அகாரம் உகாரம் மகாரம் ஆகிய பிரணவத்தினால் திருநீறு சிவ சிவ என மூன்று விரல்களினால் அணிவோம்.

திருநீறு தெய்வீகம்-ஆனந்தமயமான திருவடியை அடையலாம்.

*திருமந்திரம் - 1666*

**"கங்காளன் பூசுங் கவசத் திருநீற்றை**
**மங்காமல் பூசி மகிழ்வரே யாமாகில்**
**தங்கா வினைகளுஞ் சாருஞ் சிவகதி**
**சிங்கார மான திருவடி சேர்வரே"**

இறைவன் திருமேனியில் பூசப்பட்ட கவசத் திருநீற்றை நெற்றியில் சைவர்கள் யாவரும் பரவியணிந்து **மனதுக்கு மகிழ்ச்சியும் கண்களுக்கு ஆனந்தமும் தீயவினையும் வந்தடையாமலும் ஒவ் வொருவரும் தாம் தாம் சிவப்பேறும் திருவடியும் அடையலாம்.**

**"நானேயோ தவம் செய்தேன் சிவாய நம எனப் பெற்றேன்"**- வள்ளலார்- முன் செய்த நல்வினையின் பயனாகச் **சைவசமயத்தில் பிறந்திருக்கிறோம். அதனால் எமது சின்னங்களில் விபூதி முதற்பொருள்** ஆகும். சமயம் என்ற சொல்லுக்கு **கட்டுப்பாடும் நல்வழியும் சிவனை அடைவதற்குரிய** முதற்பொருளாக வேதாகமப் புராணங்களும் பெரியோர்களும் நன்றாக விளக்கியுள்ளனர்.

இறைவனை வழிபடுவதற்கு நமது **உள்ளமும் உடலும் எப்பொழுதும் தூய்மையாக இருக்க** வேண்டும். உள்ளத் தூய்மை மந்திர ஜெபங்களால் உண்டாகும். அந்த ஸ்நானம் ஐந்து வகை என ஆகம நூல் கூறுகின்றது.

அதில் ஒன்று தான் விபூதி நெற்றியில் பரவி அணிதல் **ஆக்னேய ஸ்நானம்ஆகும்.** விபூதி ஸ்நானம் சகல வித **பாவங்கள் பாசங்கள்** நீங்க உள்ளம் தூய்மையாகும்.

இது உண்மையைக் கந்தபுராணம் அங்கங்கே விளக்கியுள்ளது.

உண்ணத் தகாதவற்றை உண்பதனால் வரும் பாவத்தைக் **கண்டத்தில் அணியப்படும் நீறும்,** சிந்திக்கத் தகாதவற்றைச் சிந்திப்பதால் வரும் பாவத்தை **மார்பில் அணியப்படும் விபூதியும்,** ஏனைய உறுப்புகளினால் செய்யப்படும் பாவத்தை **நாடி, முதுகு, விலாப்புறம், முழந்தாள்** எனும் உறுப்புகளில் அணியும் அருள் மிகு திருநீறு நீக்குகின்றது. இவ்வாறாக உள்ளத்தால் நினைப்பவனைக் காக்கிறதுடன் **உடலும் உள்ளமும் தூய்மை பெற்று இறை வழிபாட்டிற்கு தகுதியுள்ளவனாகிறான்.**

திருநீறு அணிந்து கொள்ளும் முறை **அகாரம் உகாரம் மகாரம்** சேர்ந்தது பிரணவம் ஆகும்.

**(1) அகாரம்- மோதிரவிரலாகும். (2) உகாரம் நடுவிரலாகவும் (3) மகாரம் சுட்டு விரலாகவும் விரல் களினால் விபூதியை அணிந்து, திரிபுண்டரத்தின் அதி வேதைகள் பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் அவர்கள் அருளாகிய படைத்தல், காத்தல், அழித்தல்** எனும் முத் தொழில்களின் செயல்களை உள்ளத்தில் உணர்வோம். மூன்று விரல்களால் அணிவோம். இறைவன் அருள் பெறுவோம்.

**திருநீற்றின் பயன் திருவருள் சேர்க்கும்**

*திருமந்திரம்-1667*

**"அரசுடன் ஆல் அத்தி ஆகும் அக்காரம்**
**விரவு கனலில் வியன் உருமாறி**
**[illegible]**
**[illegible] ஆகுமே!"**

அரச மரம், ஆலமரம், அத்திமரம் போன்ற குச்சிகளை கலந்து ஆலயத்தில் சிவாச்சாரியார்கள் மந்திர உச்சாடகளுடன் வேள்வித்தீயில் இடுவர். **பெரும் பிரகாசமாக வேள்வித்தீயில் உருமாறிய நீறு அருள் மிகு விபூதி, திருநீறு ஆகும். பொன்னைப்பற்ற வைக்கப் பொற்கொல்லர் வைக்கும் பொடி போல் ஆன்மாக்களை இறைவனோடு ஒன்று செய்வது அருள்மிகு திருநீறு ஆகும்.**

வீபூதி நெற்றியில் பரவி அணிதல் சகல பாவத்தையும் நீக்க வல்லது.

**முப்பொழுதும் திருநீறு அணிந்தவன்**

**நான்கு வேத பாராயணப் பயனைப் பெறுகின்றான்.சகல புண்ணிய தீர்த்தத்திலும் நீராடிய பயனைப் பெறுகின்றான் என உபநிடதம் கூறுகின்றது.**

குருமார்கள் ஆசி கூறி விபூதி தரும் பொழுது **ஆல் போல் தழைத்து அறுகு போல் படருவாய்** என ஆசி கூறி அறுகு- **அக்ஷதை ஆசீர்வாதம் செய்வதைக் காணலாம்.**ஆறுமுகநாவலர், சமய குரவர்கள், நம் முன்னோர் சைவநெறி அருள் வழியில் ஆக்னேய ஸ்நானமாக திருநீறு அணிந்து **உள்ளமும் உடம்பும் தூய்மையாக இறைவன் திருவடி** சேருவோம்.

விபூதியின் பெருமையைப் பார்த்து உணர்ந்து மற்றவர்களுக்கும் பிரதி கொடுப்பதுடன் **அறநெறிப் பாடசாலைகளும் ஆசிரியர்களும் தொண்டாகப் பரப்புவோம்.**

**ஓம். சிவ சிவ சைவச் சின்னம் திருநீறு**

**க.கு.க.சிவபாலன்-(K.K.K)**
**போசகர்,**
**காரைநகர் ஈழத்துச் சிதம்பரம்,**
**மாணிக்கவாசகர் மடாலயம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர்

590





காவலர்கள் வல்லவரையனை நோக்கி நெருங்கினார்கள். "ஜாக்கிரதை! இவன் சொல்வதைக் கேட்டுத் தவறு செய்யாதீர்கள்! நான் இளவரசர் மதுராந்தகத் தேவரோடு வந்த நிமித்தக்காரன்!" என்று கூறினான் வந்தியத்தேவன்.

"இல்லை இல்லை! இவன் பெரும் பொய்யன். இவனை உடனே சிறைப்படுத்துங்கள்!" என்று ‍வைத்தியர் மகன் வாய்விட்டுக் கூவினான்.

இதற்குள் அவர்களைச் சுற்றிலும் ஒரு பெருங்கூட்டம் கூடிவிட்டது. கூட்டத்தில் சிலர் வந்தியதேவனுடைய கட்சி பேசினார்கள். சிலர் வைத்தியர் மகனின் கட்சி பேசினார்கள். "இவனைப் பார்த்தால் நிமித்தக்காரனாகத் தோன்றவில்லை" என்றான் ஒருவன்.

"ஒற்றனாகவும் தோன்றவில்லையே" என்றான் இன்னொருவன். "நிமித்தக்காரன் இவ்வளவு சிறு பிராயத்தனாயிருக்க முடியுமா?" "ஏன் முடியாது? ஒற்றன் குதிரை மேலேறி வீதியில் பகிரங்கமாகப் போவானா?"

"நிமித்தக்காரன் எதற்காக உடைவாள் தரித்திருக்கிறான்?" "ஒற்றன் என்றால் யாருடைய ஒற்றன் பழையாறையில் என்ன வேவு பார்ப்பதற்காக வருகிறான்?"

இதற்கிடையில் பினாகபாணி, "அவனைச் சிறைப் பிடியுங்கள்! உடனே சிறைப் பிடியுங்கள்! பழுவேட்டரையருடைய கட்டளை!" என்று கத்தினான்.

பழுவேட்டரையர் என்ற பெயரைக் கேட்டது, அங்கே கூடியிருந்தவர்கள் பலருக்கு வந்தியத்தேவன் மேல் அனுதாபம் உண்டாகிவிட்டது. அவனை எப்படியாவது தப்பிவிக்க வழி உண்டா என்று பார்த்தார்கள்.

இதற்கிடையில் ஆழ்வார்க்கடியான் அந்தக் கூட்டத்தின் ஓரத்தில் வந்து சேர்ந்தான். "இளவரசோடு வந்த நிமித்தக்காரன் இங்கே இருக்கிறானா?" என்று கூவினான்.

"இல்லை இவன் ஒற்றன்" என்று பினாகபாணி கூச்சலிட்டான். "இதென்ன வம்பு? நீ மதுராந்தகத் தேவருடன் வந்த நிமித்தக்காரனாயிருந்தால் என்னுடன் வா! உன்னை இளவரசி அழைத்து வரச் சொன்னார்!" என்றான் ஆழ்வார்க்கடியான்.

வந்தியத்தேவனின் உள்ளம் துள்ளிக் குதித்தது. "அந்த நிமித்தக்காரன் நான்தான்! இதோ வருகிறேன்" என்றான்.

"வீடாதீர்கள்! ஒற்றனை விட்டு விடாதீர்கள்!" என்று வைத்தியர் மகன் பினாகபாணி கத்தினான்."

ஆழ்வார்க்கடியான், "நீ நிமித்தக்காரன்தானா என்பதை நிரூபித்து விடு! அப்படியானால்தான் என்னுடன் வரலாம்!" என்று கூறிக் கொண்டே கண்ணால் சமிக்ஞை செய்தான்.

"என்னவிதமாக நிரூபிக்கச் சொல்கிறாய்?" என்று வந்தியத்தேவன் அவசரத்துடன் கேட்டான்.


"அதோ இரண்டு குதிரைகள் வேகமாக வருகின்றனவல்லவா? அவற்றின் மீது வருகிறவர்கள் ஏதோ அவசரச் செய்தி கொண்டு வருவதாகத் தோன்றுகிறது. அது உண்மையாயிருந்தால், அவர்கள் என்ன செய்தி கொண்டு வருகிறார்கள், சொல்!"

குதிரைகளின் பேரில் வந்தவர்களை வந்தியத்தேவன் உற்றுப் பார்த்துவிட்டு, "ஒ சொல்கிறேன், இராஜ குடும்பத்தைச் சேர்ந்த ஒருவருக்கு ஜலகண்ட விபத்து நேர்ந்திருக்கிறது! அந்த துக்கச் செய்தியைத்தான் அவர்கள் கொண்டு வருகிறார்கள்!" என்றான் வந்தியத்தேவன்.

இப்படிச் சொல்லி வாய் மூடுவதற்குள் குதிரைகள் ஜனக்கூட்டத்தை நெருங்கிவிட்டன. ஜனங்கள் மேலே போக வழிவிடாத படியால் குதிரைகள் நின்றன.

"நீங்கள் தூதர்கள் போலிருக்கிறது, என்ன செய்தி கொண்டு வருகிறீர்கள்?"

(தொடரும்)





# சிறுவர் அரங்கம்

## வித்தியாசமான உதவி

ஒரு காட்டில் ஒரு இளைஞன் நடந்து போய்க் கொண்டிருந்தான். அவனுக்குப் பசியெடுத்தது. ஒரு மரத்தின் உயரத்தில் கனிந்த பழங்கள் இருப்பதைக் கண்டான். மரத்தின் மேல் சரசரவென்று ஏறி அவற்றில் சில பழங்களைப் பறித்துத் தின்றான்.

மிகக் கனிந்த வாசனையுள்ள பழங்கள் கிளைகளின் நுனியில் இருந்தன. அவற்றை எட்டிப் பறிக்கக் கிளையின் மேல் நகர்ந்து சென்ற போது அவனது பாரம் தாங்காமல் ஒரு கிளை முறிந்து விட்டது.

சட்டென்று சுதாரித்த அவன் கீழே இருந்த ஒரு கிளையைப் பிடித்துக் கொண்டு தொங்க ஆரம்பித்தான். குனிந்து பார்த்தால் தரை வெகு கீழே இருந்தது. ஏற்கெனவே பயந்து போயிருந்த அவன் மேலும் பயந்து கண்ணை மூடிக் கொண்டு "யாராவது காப்பாற்றுங்கள்" என்று திரும்பத் திரும்ப அலற ஆரம்பித்தான். உள்ளங்கை வியர்த்து வழுக்க ஆரம்பிக்கும் நிலை வந்து விட்டது.

தற்செயலாக போது அந்தப் பக்கம் ஒரு முதியவர் வந்தார். மரத்தில் தொங்கிக் கொண்டிருந்தவனைப் பார்த்தார். அவன் மேல் ஒரு சிறிய கல்லை விட்டு எறிந்தார். கல் பட்டவுடன் வலியில் கீழே பார்த்தவனுக்கு ஆத்திரம் வந்தது. "பெரியவரே, உதவச்சொன்னால் கல்லால் அடிக்கிறீரே. அறிவில்லையா உமக்கு" என்று கோபத்துடன் கேட்டான்.

பெரியவர் பதில் பேசாமல் மற்றொரு சிறிய கல்லை எடுத்து அவன் மேல் எறிந்தார். மேலும் கோபமுற்ற இளைஞன் பெருமுயற்சி எடுத்து கையை வீசி மேலிருந்த கிளை ஒன்றை பலமாகப் பற்றிக் கொண்டு "நான் [illegible] [illegible]" என்று எச்சரித்தான்.

பெரியவர் மேலும் ஒரு கல்லை அவன் மேல் வீசினார். இளைஞன் இப்போது இன்னொரு பெருமுயற்சி எடுத்து கிளைமேல் ஏறி விட்டான். விடுவிடுவென இறங்கி வந்த அவன் நேராகப் பெரியவரிடம் வந்தான். அவரை சரமாரியாகத் திட்டினான். "ஏன் அப்படிச் செய்தீர்? உம்மை நான் உதவி தானே கேட்டேன்?" என்றான்.

பெரியவர் அமைதியாக சிரித்துக் கொண்டே "தம்பி.. நான் உனக்கு உதவிதான் செய்தேன்" என்றார். இளைஞன் திருதிருவென முழித்தான்.

பெரியவர் விளக்கினார். "நான் உன்னை முதலில் பார்த்த போது நீ பயத்தால் உறைந்து போயிருந்தாய். உன் மூளை வேலை செய்யவில்லை. நான் கல்லை விட்டு எறிந்ததும் பயம் மறைய ஆரம்பித்து நீ என்னை எப்படிப் பிடிப்பது என்று யோசிக்க ஆரம்பித்தாய். யோசிக்க ஆரம்பித்தவுடன் நீயாகவே உன்னைக் காப்பாற்றிக் கொண்டு கீழே இறங்கி விட்டாய்.

உன்னை உன்னாலேயே காப்பாற்றிக் கொள்ள முடியும் என்று உன் அறிவுக்கு முதலில் புலப்படவில்லை. உன் பயம் உன் கண்ணை மறைத்துக் கொண்டிருந்தது. அதிலிருந்து உன்னை நான் திசை திருப்பினேன் என்று சொல்லிவிட்டுத் தன் வழியே அவர் போய் விட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> மனிதன் தனது மன சக்தியின் மூலம் எதையும் சாதிக்க முடியும்,தூய பண்புகளால் மலையையும் நகர்த்த முடியும்.
> – அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அன்பார்ந்த தமிழ் இளைஞர்களே ! உங்களில் அநுராக்கள் இல்லையா?

2020ஆம் ஆண்டு நடந்த பாராளுமன்றத் தேர்தலில் மூன்று ஆசனங்களை மட்டும் பெற்றிருந்த ஜே.வி.பியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க இன்று இந்த நாட்டின் ஜனாதிபதி.

ஆம், அநுர குமார திஸாநாயக்கவுக்கு மக்கள் வாக்களித்தபோது, ரணிலின் செய்ந் நன்றியை, சஜித் பிரேமதாஸவின் அரசியல் எதிர்காலத்தை மக்கள் நினைத்தனர்.

அந்த நினைப்பு அவர்களின் நெஞ்சத்தை நெருடியது.

ரணில் விக்கிரமசிங்க தோற்றால், ஜனாதிபதி மாளிகையில் இருந்து அவர் வெளியேற வேண்டிவரும்.

வரிசை யுகத்தை நிறுத்திய ரணில் வெறுங் கையோடு வீடேகுவதை எப்படி ஜீரணிப்பது இந்தக் கேள்வி சிங்கள வாக்காளர்கள் ஒவ்வொருவரையும் குடைந்து கொண்டது.

அதேபோல சஜித் பிரேமதாஸ; பதவி தரலாம். வருக! என ஊழல் ஆட்சியாளர்கள் அழைத்தபோது, வேண்டாம் என் மக்கள் என்னைத் தெரிவு செய்தாலன்றி, எந்தப் பதவியையும் ஏற்க மாட்டேன் என்று சபதம் பூண்ட அரசியல் தலைவன்.

அநுரவுக்கு வாக்களித்தால், சஜித் தோற்பது உறுதி. சஜித்தின் தோல்வியை சஜித் மட்டுமல்ல. சிங்கள மக்களாலும் ஜீரணிக்க முடியாது.

இவ்வாறாக ஒவ்வொரு சிங்கள வாக்காளர்களினதும் புத்தி பேதலிக்கின்றது.

ஈற்றில் ஒரு முடிவுக்கு வருகிறார்கள்: ரணில் வீடு செல்வதும் சஜித் தோல்வியடைவதும் வேதனைக்குரியவைதான். ஆனால் அநுர குமார திஸாநாயக்கவின் வெற்றி ஒன்றுதான் இந்த நாட்டைக் காப்பாற்றும்.

அதேநேரம் அநுரவை ஜனாதிபதியாக்காமல் நாம் விட்டால், இந்த நாடு இன்னமும் ஊழலுக்குள் உழன்று கிடக்கும்.

ஆகையால், எதுநடந்தாலும் அநுரவை ஜனாதிபதியாக்குவோம். அநுரவை ஜனாதிபதியாக்கினால், அவரின் ஆட்சி நிர்வாகம்; மக்களின் தீர்ப்பு சரியானது என்பதை இந்த உலகம் ஏற்பதாக வகை செய்யும்.

அதனிலும் மேலாக, அநுரவுக்கு மக்கள் வாக்களித்ததில் நியாயம் உண்டு என்பதை ரணிலும் சஜித்தும் ஏற்றுக் கொள்வர்.

ஆம், சிங்கள மக்களிடம் இருந்த இந்த உன்னதமான நம்பிக்கையே அநுரவுக்கான வாக்களிப்பாகும்.

இதைநாம் கூறும்போது, அத்தகு நம்பிக்கையை சிங்கள மக்களிடம் ஏற்படுத்த வல்ல தலைவனாக அநுர குமார திஸாநாயக்க இருந்தார் என்ற உண்மையையும் இங்கு கூறித்தானாக வேண்டும்.

இங்குதான் தமிழ் இனத்தைத் திரும்பிப் பார்க்கின்றேன். அதே அரசியல் தலைகள் இம்முறையும் தேர்தல் திருவிழாவில்.

எம் இளைஞர் சமூகம் உறங்கிக் கிடக்கிறது. ஓ! தமிழ் இளைஞர்களே ! உங்களில் அநுராக்கள் இல்லையா? பள்ளி எழுந்து பாருங்களேன். எங்களுக்கும் விடிவு வேண்டாமோ. எம் அருமந்த இளைஞர்களே! எழுந்து வாருங்கள்.

# ஜனாதிபதி செயலகத்திற்குச் சொந்தமான 253 வாகனங்கள் முறைகேடாகப் பயன்பாடு

### ஜே.வி.பி முன்னாள் எம்.பி வசந்த சமரசிங்க

(கொழும்பு)

ஜனாதிபதி செயலகத்திற்குச் சொந்தமான 253 வாகனங்கள் முறைகேடாகப் பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும் இவ்வாறு அரச சொத்துக்களை துஷ்பிரயோகம் செய்த நபர்களின் பெயர்கள் நாட்டு மக்களுக்கு வெளியிடப்படும் என்றும் இவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் ஜே.வி. பியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது இந்த வாகனங்கள் தொடர்பாக நாம் தீர்க்கமான விசாரணைகளை நடத்தி, உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக நாம் உரிய நடவடிக்கை எடுப்போம். யார் அரச சொத்துக்களை துஷ்பிரயோகம் செய்தது என்ற விபரங்களை நாம் நாட்டு மக்களுக்கும் வெளிப்படுத்துவோம்.

அரச அதிகாரிகள் இதற்காக எமக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். ஏனெனில், இவர்களுக்குத்தான் இந்த வாகனங்களை யாருடையது, யார் பயன்படுத்தியது என்ற அனைத்து விடயங்களும் தெரியும்.

ஏன், இவர்கள் இந்த வாகனங்களை ஒப்படைத்துவிட்டு ஒழிய வேண்டும்? அதாவது, உரிமையில்லாதவற்றை பயன்படுத்தினால்தான் பயப்பட்டு, ஒழிந்து செல்ல வேண்டும்.

ஜனாதிபதி செயலகத்திற்கு சொந்தமான 253 வாகனங்களை வெளியாட்கள் பயன்படுத்துகிறார்கள்.

இவைதான் இவ்வாறு நிறுத்தப்பட்டுள்ளன. ஜனாதிபதி செயலக அதிகாரிகளிடம், வாகனங்களைப் பயன்படுத்திய நபர்களின் பெயர் விபரங்களை கோரியுள்ளோம்.

இந்த அனைத்து நபர்களுக்கு எதிராகவும் எதிர்க்காலத்தில் சட்ட நடவடிக்கை மேற்கொள்வோம்.

ஜனாதிபதி இது தொடர்பாக உறுதியாகவுள்ளார். இது மக்களுடைய வாகனங்கள். இவை மீளவும் மக்களுக்கே வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என வசந்த சமர சிங்க தெரிவித்துள்ளார்.(ம-7)

### நீதிமன்ற உத்தரவை அவமதித்த

## குடிவரவு,குடியகல்வு கட்டுப்பாட்டாளர் மறியலில்

(கொழும்பு)

கடந்த அரசாங்க காலப் பகுதியில் இலத்திரனியல் விசா வழங்கும் செயன்முறை இரண்டு தனியார் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டமையை இரத்துச் செய்யுமாறு விடுக்கப்பட்ட நீதிமன்ற உத்தரவை நிறைவேற்றத் தவறி நீதிமன்றை அவமதித்த குற்றச்சாட்டில், குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் ஹர்ஷ இல்லுக்பிட்டிய விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

தனியார் நிறுவனங்களுக்கு விசா வழங்கும் செயன்முறை வழங்கப்பட்டதன் ஊடாக முறைகேடுகள் இடம்பெறுவதாகத் தெரிவித்து, ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் உள்ளிட்டவர்களால் அடிப்படை உரிமை மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

அந்த மனுக்களின் அடிப்படையில் குறித்த தீர்மானத்தை இரத்துச் செய்ய உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்த போதும், அதனை நடைமுறைப் படுத்த தவறியதாக குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகத்துக்கு எதிராகக் குற்றம் சுமத்தப்பட்டது.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, அவருக்கு எதிரான குற்றச்சாட்டுப் பத்திரம் வாசிக்கப்பட்டது. இந் நிலையில், இந்த வழக்கு விசாரணை நிறைவடையும் வரை அவரை விளக்கமறியலில் வைக்க உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது. குறித்த, வழக்கு அடுத்த வருடம் ஜனவரி மாதம் 22ம் திகதி வரையில் ஒத்திவைக்கப்பட்டது. (ம-7)

## பாராளுமன்றத் தேர்தல் திகதி சரியானது

### தேர்தல்கள் ஆணையாளர்

(கொழும்பு)

பாராளுமன்றத் தேர்தலை நடத்த அறிவிக்கப்பட்டுள்ள திகதி அரசமைப்புக்கு முரணானது என சமூக ஊடகங்களில் வெளியாகும் கருத்துக்களைத் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ரத்நாயக்க மறுத்துள்ளார்.

பாராளுமன்றத் தேர்தலை நடத்த எதிர்வரும் நவம்பர் மாதம் 14 ஆம் திகதி ஏற்ற திகதி அல்ல. ஏனெனில் தேர்தலுக்கு வேட்புமனுத் தாக்கல் செய்த பின்னர் 5 வார கால இடைவெளி இருக்க வேண்டும் என சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்று பலர் கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர். இதற்குத் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ரத்நாயக்க விளக்கமளித்துள்ளார்.

பாராளுமன்றத் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் செய்வதற்கான கால அவகாசம் ஒக்டோபர் 4 - 11 வரை ஆகும். வேட்பு மனுத் தாக்கல் செய்ய ஆரம்பிக்கும் திகதி உட்பட 5 வார இடைவெளி இருக்க வேண்டும் என்று சட்டம் கூறுகின்றது. எனவே, தேர்தலுக்கு நவம்பர் 14 ஆம் திகதி சரியானது என்று தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார். (ம-7)

### தேர்தலில் போட்டியிட்ட அனைவரும்

## பிரசாரச் செலவுப்பட்டியலை சமர்ப்பிக்க வேண்டும்

### தேர்தல் ஆணையாளர் நாயகம்

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட அனைத்து வேட்பாளர்களும், எதிர்வரும் 13ஆம் திகதிக்கு முன்னர், தேர்தல்ஆணைக் குழுவிடம் தமது பிரசார செலவுப் பட்டியலை சமர்ப்பிக்க வேண்டும் என தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் வெளியான 21 நாட்களுக்குள் அது தொடர்பான அறிக்கையை ஆணைக்குழுவில் சமர்ப்பிக்குமாறு 38 வேட்பாளர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

தேர்தல் ஆணையத்திடம் அறிக்கைகள் வழங்கப்பட்ட பிறகு, அவை பொது மக்களின் பார்வைக்கு வைக்கப்படும் என்றும், தவறான செலவு அறிக்கைகள் இருந்தால், சரிபார்க்கக்கூடிய ஆவணங்களுடன் யார் வேண்டுமானாலும் பொலிஸில் முறைப்பாடு செய்யலாம் என்றும் தேர்தல் ஆணையம் கூறுகிறது.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் வாக்காளர். ஒருவருக்கு செலவிடும் தொகை 109 ரூபா என தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது: அதன்படி, ஒரு கோடியே எழுபத்து ஒரு லட்சத்து நாற்பதாயிரத்து முந்நூற்று ஐம்பத்து நான்கு (17,140,354) வாக்காளர்களுக்கு ஒரு வேட்பாளர் பிரசாரச் செலவுக்கு செலவிடக்கூடிய அதிக பட்ச வரம்பு 186 கோடி ரூபாய் என குறிப்பிடப்படுகின்றது. (ம-7)

## காத்தான்குடியில் விபத்து பெண் ஒருவர் மரணம்

காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்லடி பிரதான வீதியில் லொறி மற்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் பெண் ஒருவர் சம்பவ இடத்தில் உயிரிழந்துள்ளார். நேற்று மூன் தினம் மாலை இவ் விபத்து இடம்பெற்றுள்ளது. காத்தான்குடியை சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தாயான (48) வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கல்முனையிலிருந்து மட்டக்களப்பு நோக்கி பிரதான வீதி வழியாக பயணித்துக் கொண்டிருந்த போதே கல்லடிப்பகுதியில் வைத்து இவ்விபத்து இடம் பெற்றுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சில நாடுகளின் சமஷ்டி அரசியல் முறைமையும் இலங்கையின் 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தமும்

## ஒரு பார்வை

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

21

இலங்கையை விட சிறிய நாடுதான் பெல்ஜியம். அங்கு சிறந்த சமஷ்டி ஆட்சி கட்டமைப்பு உள்ளது. ஆக அதிகாரப் பகிர்வு என்பது அழிவைத்தேடித்தராது. ஒரு நாட்டுக்குள் சமஷ்டி கோருவது தனி நாடு கோருவது அல்ல என உயர்நீதிமன்றம் கூட தெளிவான தீர்ப்பை வழங்கியுள்ளது எனவும் வெளிவிவகார அமைச்சர் கூறினார்.

அண்மையில் பாராளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தில் உரையாற்றிய வெளிவிவகார அமைச்சர், அதிகாரப்பகிர்வு தொடர்பான தமிழர் தரப்பு கோரிக்கை நியாயமானது எனவும் சுட்டிக்காட்டினார்.

தாம் தனிநாடு கோரவில்லை எனவும், ஒரு நாட்டுக்குள் அதிகாரப் பகிர்வையே கோருகின்றோம் எனவும் தமிழ்த் தலைவர்கள் கூறியுள்ளனர். சமஷ்டி முறைமையிலேயே அதிகாரப்பகிர்வு அவசியம் என கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார். அதிகாரப்பகிர்வு தொடர்பில் இவ்வாறு கருத்து வெளியிடுவதில் எவ்வித தவறும் கிடையாது. அதற்கான சுதந்திரம் அவர்களுக்கு இருக்க வேண்டும்.

அதிகாரப் பகிர்வு தொடர்பான பேச்சுகள் ஆரம்பிக்கப்பட வேண்டும், அதிகாரங்களைப் பகிர்வது நாட்டை பிரிப்பது எனக் கூறப்படுவது அப்பட்டமான பொய்யாகும். எனவும் அமைச்சர் அலிசப்ரி குறிப்பிட்டார்.

அண்மையில் ஐரோப்பாவுக்கு சென்றிருந்தேன். பெல்ஜியம் என்பது இலங்கையைவிட சிறிய நாடாகும். இலங்கை போன்ற சிறிய நாட்டுக்கு எதற்கு அதிகாரப்பகிர்வு என சிலர் கேட்கின்றனர். பெல்ஜியத்தின் தனியான 10 மாகாணங்கள் உள்ளன. அவர்கள் இணைந்து சிறந்த சமஷ்டி முறைமையை உருவாக்கியுள்ளனர். ஐக்கியமாகவும் சமாதானத்துடனும் வாழ்கின்றனர்.

எனவே, கட்சி பேதமின்றி அனைவரும் வந்து அதிகாரப் பகிர்வு தொடர்பில் தமது நிலைப்பாட்டை முன்வைக்க வேண்டும். அதிகாரப் பகிர்வு என்பது நாட்டை பிரிப்பதற்கான ஆரம்பக்கட்ட நடவடிக்கை என சிலர் கூறுகின்றனர். அவ்வாறு நடக்காது. இனப்பிரச்சினை விவகாரத்தில் அனைத்து கட்சிகளும் அன்று முதல் சந்தர்ப்பவாத அரசியலையே நடத்துகின்றன. நாம் எதிர்காலம் பற்றி சிந்திக்க வேண்டும். அனைவரும் இலங்கையராக கருதப்பட்டு இப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும்.

ஒரு நாட்டுக்குள் சமஷ்டியை கோருவது தனி நாடு கோருவது அல்ல என உயர்நீதிமன்றம் கூட தெளிவான தீர்ப்பை வழங்கி இருந்தது. சிங்கள நீதியரசர்களே இந்த தீர்ப்பை வழங்கி இருந்தனர். இவ்வாறு அவர் கூறியது பல பத்திரிகைகளில் வந்திருந்தன.

### இலங்கை அரசியல் அமைப்பின் 13 ஆவது திருத்தம் கூறுவதென்ன?

மாகாண சபைகளின் சட்டவாக்க அதிகாரங்கள் பற்றி இங்கு விவரிக்கப்படுகின்றது. இதன் கீழ் 13 ஆவது அரசியலமைப்பு திருத்தச் சட்டத்தின்படி சேர்க்கப்பட்டுள்ள 9 ஆம் அட்டவணையில் உள்ள 3 நிரல்களின் விபரங்கள், ஒருங்கிணைந்த பட்டியலிலிருந்து மாகாண சபைக்கு கிடைக்கும் அதிகாரங்கள், ஒதுக்கிய நிரலுடன் தொடர்புபட்ட மாகாண சபை நிரலில் உள்ள விடயங்கள், ஒருங்கிணை நிரலுடன் தொடர்புபட்ட மாகாண சபை நிரலில் உள்ள விடயங்கள், மாகாணச் சபைக்கான நியதிச்சட்டங்கள் ஆக்கல், நியதிச் சட்டத்தை ஆக்குவதற்கான படி முறைகள், நியதிச் சட்டங்கள் சம்பந்தமான விடயத்துடன் சம்பந்தப்பட்ட அமைச்சரின் செயலாளரின் மற்றும் பேரவையின் செயலாளரின், ஆளுநரின் செயலாளரின் செயற்பாடுகள், இயற்றப்படும் நியதிச் சட்டங்களுக்கு ஆளுநரின் சம்மதம் பெறல் போன்றவை உள்ளடங்கியுள்ளன.

மாகாண சபையால் இயற்றப்படும் நியதிச் சட்டங்களை நீதிமன்றத்தின் மறு ஆய்வுக்கு உட்படுத்தமுடியும். அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தம் ஒவ்வொரு மாகாணசபைக்கும் மாகாணத்துக்கும் ஏற்புடைத்தான நியதிச் சட்டத்தை ஆக்கிக்கொள்ள ஏற்பாடுகளைச் செய்துள்ளது. மாகாணசபையால் ஆக்கிக் கொள்ளப்படும் ஒவ்வொரு நியதிச்சட்டமும் ஆளுநரின் சம்மதத்துக்கு சமர்ப்பிக்கப்படும். ஆளுநர் நியதிச்சட்டத்துக்கு சம்மதம் வழங்கலாம் அல்லது நியதிச்சட்டத்தை மீண்டும் கவனத்துக்கு எடுத்துக் கொள்ளும்படி மாகாண சபைக்கு திருப்பி அனுப்பலாம்.

உறுப்புரை 154G மாகாண சபைக்கு சட்டங்களை உருவாக்க உதவுகிறது. எவ்வாறாயினும், இந்த அதிகாரம் அரசியலமைப்பில் உறுப்புரை 75 மற்றும் உறுப்புரை 154 (G) (10) உள்ளிட்ட விதிகளுக்கு உட்பட்டது. உறுப்புரை 75 இன்படி பாராளுமன்றத்திற்கு வரையறை செய்யப்படாத சட்டவாக்க அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது. அரசியலமைப்பின் 170 ஆவது உறுப்புரையில் உள்ள 'சட்டம்' என்பதன் வரையறை திருத்தப்படாமல் இருப்பதால் மாகாண சபையால் இயற்றப்பட்ட ஒரு சட்டம் (அதாவது நியதிச்சட்டம்) சட்டத்தின் அரசியலமைப்பு நிலையை அடையவில்லை.

13 ஆவது திருத்தத்தில் உறுப்புரை 154G(10) கூறுவது என்னவென்றால் இலங்கை முழுவதற்கும் அல்லது அதன் ஏதேனும் பாகத்திற்கு ஏதேனும் விடயம் தொடர்பில், அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கிணங்க சட்டங்களை ஆக்குவதற்கு அரசியலமைப்பின் மூலம் பாராளுமன்றத்திற்கு அளிக்கப்பட்ட தத்துவங்களை, இந்த உறுப்புரையில் (154G) உள்ள எதுவும் மதிப்புக் குறைப்பதாக வாசிக்கப்படுதலோ பொருள்கொள்ளப்படுதலோ ஆகாது என்பதாகும்.

நியதிச்சட்டங்கள் அரசியலமைப்பு சட்ட விலக்களிப்பை அனுபவிப்பதில்லை. இந்நியதிச் சட்டங்களை எப்போதும் (பல வருடங்கள் கழிந்தால் கூட) நீதிமன்றத்தின் மறுஆய்வுக்கு உட்படுத்தமுடியும். இவை மாகாண சபைகளின் அதிகாரத்துக்கு அப்பாற்பட்டதாயின் சட்டவலிவற்றது ஆகும்.

### மாகாண சபைகளின் சட்ட அதிகாரங்கள்

இனி நாம் மாகாண சபை நிர்வாகத்திற்கு வருவோம். அரசாங்கத்திடம் மையப்படுத்தப்பட்டிருந்த சட்டவாக்கமும் நிர்வாகமும் தொடர்பான அதிகாரங்களில் ஒரு பகுதி சில விதிமுறைகளுக்கமைவாக மாகாண சபைகள் வசம் வழங்கப்பட்டுள்ளன.

13 ஆவது அரசியலமைப்பு திருத்தச்சட்டத்தின்படி சேர்க்கப்பட்டுள்ள 9 ஆம் அட்டவணையின் பிரகாரம் 3 பட்டியல்கள் / நிரல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. அவையாவன: மத்திய அரசு நிரல், ஒருங்கிணைந்த நிரல் மற்றும் மாகாணசபை நிரல் ஆகும். மாகாணசபை நிரல் மூன்று பின்னிணைப்புக்களைக் கொண்டுள்ளது.

சட்டம் மற்றும் ஒழுங்கு விடயங்கள் பற்றி பின்னிணைப்பு I உம், காணி மற்றும் காணிக் குடியேற்றம் விடயங்கள் பற்றி பின்னிணைப்பு II உம் கல்வி விடயங்கள் பற்றி பின்னிணைப்பு III உம் விவரிக்கின்றன. இதுபற்றி உரு-1இல் தெளிவாகக் காட்டப்பட்டுள்ளது.


மாகாண சபையானது அப்பிரதேசத்தினுள் சட்டத்துறை, நிர்வாகத்துறை, நீதித்துறை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இந்நோக்கினை நிறைவேற்றுவதற்காக அரசியல் யாப்பின் 9 ஆவது அட்டவணை பிரயோகிக்கப்படும். அதிலுள்ள 3 நிரல்களில் கூறப்பட்டுள்ளதாவது:

1ஆவது நிரல் மாகாண சபை நிரல் எனப் பெயர் கூறப்படுவதோடு மாகாண சபைகளுக்கான (37) விடயங்கள் அதில் இடம் பெறும்.

2ஆவது நிரல் அல்லது ஒதுக்கிய நிரலில் மத்திய அரசாங்கத்திற்கென ஒதுக்கப்பட்டுள்ள (16) விடயங்கள் இடம் பெறுகின்றன.

அரசியலமைப்பில் மாகாண சபையுடன் சார்ந்த பிரதான பகுதிகள்

அரசியலமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தத்தின் 4வது வாசகத்தால் அத்தியாயம் XVII A (தமிழில் XVII அ) சேர்க்கப்பட்டுள்ளது




உரு -1

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வட மாகாண...

முன்னாள் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டிருந்த ஆளுநர்கள் பலர் பதவி விலகியிருந்தனர்.

இந்த நிலையில், வடக்கு மாகாண ஆளுநராக யாழ்ப்பாணம் மாவட்ட முன்னாள் மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் நியமிக்கப்பட்டுள்ளார். (ம-7)

## யாழ்ப்பாண...

மாவட்டத்திலிருந்தும் தேர்ந்தெடுக் கப்படும் பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை மற்றும் வேட்புமனுவில் உள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கை ஆகியவற்றைக் குறிப்பிட்டு இலங்கைத் தேர்தல் ஆணையம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

மொத்தமாக 196 பாராளுமன்ற உறுப்பினர்கள் மாவட்ட ரீதியாக தெரிவு செய்யப்படவுள்ள நிலையில், கம்பஹா மாவட்டத்தில் இருந்து அதிக எண்ணிக்கையாக 19 பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

அதேவேளை குறைந்தபட்சமாக திருகோணமலை மாவட்டத்தில் இருந்து 4 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் 7 ஆக இருந்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 6 ஆகக் குறைந்துள்ளது. வன்னி மாவட்டத்தில் இருந்து தெரிவாகும் உறுப்பினர்கள் 6 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## அநுரவின்...

ஜோர்ஜீவா, ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவுக்கு வாழ்த்துத் தெரிவித்துக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

தற்போதைய ஜனாதிபதி யின் தலைமையில் இலங்கை நிலையான, வளமான மற்றும் பாதுகாப்பான எதிர்காலத்தை அடைய முடியும் என நம்புவதாகவும் அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தற்போது செயற்படுத்தப்படும் சர்வதேச நாணய நிதிய வேலைத்திட்டம் உட்பட இலங்கையின் அபிவிருத்தி மற்றும் சீர்திருத்த இலக்குகளை அடைவதற்கு நிலையான பங்காளியாகத் தொடர்ந்து பணியாற்றுவதற்கு சர்வதேச நாணய நிதியம் தயாராக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் ஸ்திரத்தன்மை, செழிப்பு மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியின் எதிர்காலத்தைப் பாதுகாக்க ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் தலைமை உதவும் என கிறிஸ்டலினா ஜோர்ஜீவா நம்பிக்கை வெளியிட்டார். (ம-7)

## மோ.சைக்கிள்...

விபத்தில் படுகாயமடைந்தவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

இதில் அராலி கிழக்கு, அம்மன் கோவிலடிப் பகுதியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான வைரமுத்து முருகையா (வயது-70) என்பவரே உயிரிழந்தவராவார்.

குறித்த நபர் கடந்த 8ஆம் மாதம் 28ஆம் திகதி துவிச்சக்கரவண்டியில் யாழ்ப்பாணத்தில் இருந்து, அராலியில் உள்ள தனது வீடு நோக்கி வந்து கொண்டிருந்தவேளை கல்லுண்டாய்ப் பகுதியில் பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் படுகாயமடைந்தார்.

சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

தொடர்ச்சியாக மயக்க நிலையில் இருந்ததனால் வைத்தியசாலையால் அவருக்கு சிகிச்சை வழங்க முடியாத நிலையில் இருந்து கடந்த 20ஆம் திகதி வீட்டிற்கு அனுப்பி வைக்கப்பட்டார். இந்நிலையில் நேற்றைய தினம் உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.

விபத்தால் தலையில் ஏற்பட்ட காயம் காரணமாக மரணம் சம்பவித்ததாக அறிக்கையிடப்பட்டது. (ம-7)

## தமிழ்த்...

விடுதி ஒன்றில் இந்த கலந்துரையாடல் இடம்பெற்றது.

குறித்த கலந்துரையாடலில், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன், தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன், தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் என்.ஸ்ரீகாந்தா, ஜனநாயகப் போராளிகள் கட்சியின் தலைவர் சி.வேந்தன், தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின், பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான கோவிந்தன் கருணாகரன், ஊடகப் பேச்சாளர் குருசாமி சுரேந்திரன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், ஜனநாயகப் போராளிகள் கட்சியின் ஊடகப்பேச்சாளர் க.துளசி உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர். (ம-7)

## அரசியல்வாதிகள்...

மாற்றங்கள் ஏற்படுத்தப்படும் என அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார். அமைச்சுப் பொறுப்புக்களைக் கையேற்ற பின்னர் ஊடகங்களுக்கு இவ்வாறு குறிப்பிட்டார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

சட்டம் ஒழுங்கைப் பேணுவதற்கும் பொலிஸார் மீது நம்பிக்கையை ஏற்படுத்துவதற்கும் துரித நடவடிக்கைகள் எடுக்கப்படும். பொலிஸார் அரசியல் தலையீடுகள் இன்றி சுதந்திர மாகச்செயற்படுவதற்கான சூழல் உடனடியாக உருவாக்கப்படும். சட்டமொழுங்கைநடைமுறைப் படுத்துவதில் பொலிஸாருக்கு முழுமையான சுதந்திரத்தை வழங்குவேன். எந்த அரசியல் தலையீடும் இருக்கக்கூடாது. அரசாங்க அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் எவரும் பொலிஸ் உயர் அதிகாரிகளை தொடர்பு கொள்ள மாட்டார்கள். இவ்வாறானதொரு மாற்றத்தை எதிர் பார்த்தே இந்நாட்டு மக்கள் தேசிய மக்கள் சக்திக்கு அதிகாரத்தை வழங்கினார்கள்" என மேலும் தெரிவித்தார். (ம-7)

## ஜனா...

ஜனாதிபதியாகப்பதவியேற்ற அநுர குமார திஸாநாயக்க அமைச்சர்களின் வாகனங்களை தடுத்து கொழும்பு காலி முகத்திடலில் ஒப்படைக்குமாறு அதிரடி உத்தரவு பிறப்பித்திருந்தார்.

இதனால் அரசியல்வாதிகள் பலர் அதிர்ச்சியடைந்திருந்தனர். மக்கள் வரிப் பணத்தில் கொள்வனவு செய்த வாகனங்களை ஒப்படைக்குமாறு உத்தரவிட்டதால் மக்களும் மகிழ்ச்சியடைந்தனர்.

மேலும் ரணிலின் ஆட்சியில் இறுதியில் வழங்கப்பட்ட மதுபான விற்பனை அனுமதிப்பத்திரங்களையும் இரத்துச் செய்யுமாறு ஜனாதிபதி உத்தரவு பிறப்பித்துள்ளார்.

மேலும் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க நாட்டு மக்களுக்கு விசேட உரையாற்றினார்.

அதில் இறுதியாக இருந்த பாராளுமன்றம் மக்கள் ஆணையை திரிபு படுத்தியதாகக் காணப்பட்டது. அதனால் பாராளுமன்றத்தைக் கலைக்க நடவடிக்கை எடுத்தேன் என்றார்.

மேலும் சர்வதேச நாணய நிதியத்துடன் நீடிக்கப்பட்ட கடன் திட்டம் தொடரும் என்றும், கடன் மறுசீரமைப்பு தொடர்பான சலுகைகள் குறித்து விரைவில் பேச்சுவார்த்தை நடத்தப்படும் என்றார். (ம-7)


மஹஜன சம்பத — திகதி 2024.09.25 — சீட்டிழுப்பு இலக்கம் 5606 — K 5 3 7 7 8 0 — அத சம்பத K 7 7 8 0 — சீட்டிழுப்பு இலக்கம் 181 — National Lotteries Board

தன நிதானய — திகதி - 2024.09.25 — சீட்டிழுப்பு இலக்கம் - 1636 — R 11 37 49 76 R — Double Chance 79659

மெகா பவர் — திகதி 25/09/2024 — சீட்டிழுப்பு இலக்கம் 1954 — K 06 07 69 72 77 — 20604

லக்கி 7 VIP — திகதி 2024.09.25 — சீட்டிழுப்பு இலக்கம் 0432 — Z 7 5 1 4 6 4 Z

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3848 — சீட்டிழுப்பு திகதி 25.09.2024 — Y 06 20 25 51 — Y 87253 — தேசிய லொத்தர் சபை

HANDAHANA — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2024.09.25 — சீட்டிழுப்பு இலக்கம் 915 — மகரம் 09 24 48 56 மகரம் — 70407 — 29

உத்தியோகபூர்வ முடிவுகள் — சுப்பர் பல சம்பத — 25.09.2024 — வெற்றி வாரம் 314 — வர்ணம் பச்சை — E 1 2 2 1 0 8 — 62046 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.22,609,620.00 — DLB

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2580 — வர்ணம் சிவப்பு — சீட்டிழுப்பு திகதி 25.09.2024 — தினம் புதன்கிழமை — 20 23 31 46 B — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 59,471,167.20 — DLB

சனிதா — திகதி 2024.09.25 — வெற்றி வாரம் 4741 — 19 25 56 59 H — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.51,984,719.20 — 30129 — DLB

ராசி — சீட்டிழுப்பு வாரம் 4292 — வர்ணம் பச்சை — சீட்டிழுப்பு திகதி 2024.09.25 — தினம் புதன்கிழமை — 03 30 34 37 மகரம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 5,355,638.80 — 189701 — DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம் — M 33 28 42 44 74 — 1756 — 25.09.2024 புதன்கிழமை — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 546,742,597.40 — DLB

ஜயோதா Jayoda — திகதி 2024.09.25 — வெற்றி வாரம் 2063 — வர்ணம் மஞ்சள் — 04 05 35 55 D — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.25,520,772.40 — DLB

ADA KOTIPATHI — புதன்கிழமை — வெற்றி வாரம்: 2406 — சீட்டிழுப்பு திகதி: 2024.09.25 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 69,388,860.80 — 07 12 55 64 K — 923133 — DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிவந்து விட்டது

வினா-விடை வடிவிலமைந்த
புத்தம்புதிய வெளியீடு !!

விஞ்ஞானமுறை

(LOGIC பாடத்திற்கானது) (2117)

எஸ் . எஸ். மனோகரன்



வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-1256) 076 825 7716 (ஆகாஸ்)


## தியாக தீபம்...

5 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து, திலீபன் 15.09.1987 - 26.09.1987 வரையான 12 நாட்கள் நல்லூரில் ஒரு சொட்டு நீர், ஒரு பருக்கை உணவு ஏதுமின்றி கொள்கைப் பிடிப்போடு அகிம்சை வழிப் போராட்டம் நடாத்தி கோரிக்கைகள் எதுவும் நிறைவேற்றப்படாததால் 12 வது நாள் காலை 10.48 மணிக்கு வீரமரண மடைந்தார்.

அந்தவகையில் தமிழின விடுதலைக்காய் 12 தினங்களாக நீராகாரம் இன்றி அகிம்சை வழி நின்ற திலீபன் மௌனித்த இறுதிநாளான இன்று நல்லூர் திடலில் பிரதான நிகழ்வும் அதனைச் சார்ந்து யாழ். பல்கலைக்கழகம் உள்ளிட்ட தமிழர் தாயகத்தின் பல்வேறு இடங்களிலும் திலீபன் நினைவேந்தல் நிகழ்வுகள் உணர்வுபூர்வமாக இடம்பெறவுள்ளன.(ம-7)


Care Giver - பராமரிப்பாளர்

கனடா, அமெரிக்கா, ஜேர்மனி
போன்ற நாடுகளில் வேலை வாய்ப்பினை
பெறக்கூடிய கற்கை நெறி - 1 Year Diploma

கனடாவில் புதிதாக உள்வாங்கப்படவுள்ள நிரந்தரகுடியுரிமையுடனான 15'000 Care Giver வாய்ப்புக்களுக்கான சர்வதேச தரமிக்க Diploma சான்றிதழுடன் Care Giver கற்கை நெறி மற்றும் Immigration Services - விசா சேவைகள்.
(இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்)

(C-1255) CIMS College
49A, Chapel Street, Jaffna.

College Of International Migration Skills
0777 068 777 / 077 7719 322



## பணிப்பெண் தேவை

எங்கள் இரண்டு சிறுவர்களைப் பராமரிப்பதற்காக நாங்கள் வீட்டுப் பணிப்பெண்ணைத் தேடுகிறோம். அவர் எங்களுடன் வீட்டில் தங்கியிருக்க வேண்டும். (377)

076 695 8498



V2 VISA SERVICES
கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-1259)



புதிய பிரிவுகள் ஆரம்பம்
28.09.2024

தொழிற்துறைக் கணக்காளர் ஆவதற்கு
aat (Sri Lanka)
(AA1, AA 2, AA3)
G. C. E. O/L பெறுபேற்றினை எதிர்பார்த்திருப்பவர்களும் கற்கலாம்.

கணக்காளர் கற்கை நெறிகள்
Chartered Accounting Courses
Business Level - I,II

வங்கியியல் கற்கை நெறிகள்
Banking Courses
DBF & HDBF
(C-1257)

Certificate Course in English

Further Details : Jaffna College
Undergraduate Dept.
464, Hospital Road, Jaffna.
021 222 3382/ 021 222 9149
- 077 440 5917



விசாக்கான (Show money)

வங்கி இருப்பு உறுதிப்படுத்தி தரப்படும்.

1%
• Visit visa
• Student visa
• Fixed & saving
• லட்சத்திற்கு 1000 மட்டுமே

சகல நாடுகளுக்குமான விசா சேவைகள்
தொடர்புகளுக்கு: (1908)

075 033 6759



இந்தியன் விசா சேவைகள்

ஒரு வருட E-Visa இப்பொழுது 9000/= ரூபாவிலிருந்தும்


யாழ்ப்பாணம் - சென்னை விமானப் பயணச் சீட்டுக்கள்

42,500/= இலிருந்து விசேட விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம். (378)

APEX TRAVELS
0777 597 598, 076 3333 644
இல.105/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். CTB பஸ் தரிப்பிடத்திற்கு அருகில்)


# மரண அறிவித்தல்

மலர்வு
09
-
11
-



உதிர்வு
25
-
09
-

## திரு. தம்பித்துரை ஐயா விக்கினேஸ்வரன் ஐயா (மணி ஐயா)

பண்டகை, உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், கொட்டியவளை, பத்தமேனி, அச்சுவேலியை வதிவிடமாகவும் கொண்ட திரு.தம்பித்துரை ஐயா விக்கினேஸ்வரன் ஐயா (மணி ஐயா ) அவர்கள் 25.09.2024 புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பித்துரை ஐயா - கண்மணி அம்மா ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்ற அழகுசுந்தரம் ஐயா - சொர்ணாம்மா ஆகியோரின் அன்பு மருமகனும், மனோகரதேவி அம்மாவின் பாசமிகு கணவரும், பாலமுருகன் (டென்மார்க்), பாலசேந்தன் ஐயா, அனுசூயா, தங்கப்பிரியா (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 27.09.2024 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பத்தமேனி தீர்த்தாங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார்,உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு
077 399 9904 (C-1258)

குடும்பத்தினர்

# மாவட்ட நீதிமன்றம், யாழ்ப்பாணம்.
## பகிரங்க ஏல விற்பனை

இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி
சேர் சிற்றம்பலம் ஏ காடினர் மாவத்தை
தபால்பெட்டி இல: 2085
கொழும்பு - 02

இதன் கிளை அலுவலகம்
இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி
நிதிக் கூட்டுத்தாபன வங்கி
வழக்கு இலக்கம் MB/98/2019 இல - 127, கே.கே.எஸ்.வீதி. யாழ்ப்பாணம்

வழக்காளி

எதிர்

1 முருகராசா வசீகரன்
2. வசீகரன் ரஜீனா
இருவரும்
அல்வாய் வடக்கு, பருத்தித்துறை
யாழ்ப்பாணம்

எதிராளிகள்

2023.10.09ம் திகதி யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றினால் கட்டளையிடப்பட்டு பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றினால் பதிவுசெய்யப்பட்ட விற்பனவு ஆணையாளராகிய துரைச்சாமி சிறீமோகன் ஆகிய என்னை அங்கீகரிக்கப்பட்ட கட்டுப்பாடுகளுக்கமைவாகவும் எனக்களிக்கப்பட்ட விற்பனவு அதிகாரத்திற்கமைவாகவும் இவ்விற்பனவை நடாத்த மன்று நியமித்துள்ளதால் இதன் கீழுள்ள ஆதன அட்டவணையில் விபரிக்கப்பட்ட ஆதனத்தை குறித்த யாழ்ப்பாணம், பருத்தித்துறை, அல்வாய் வடக்கில் அமைந்துள்ள ஆதனத்தில் நின்று 2024ம் ஆண்டு ஐப்பசி மாதம் 28ம் திகதி திங்கட்கிழமை காலை 11 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படுமென இத்தால் அறியத்தருகின்றேன்.

### தீர்வைத் தொகை

1ம் 2ம் எதிராளிகள் வழக்காளிக்கு தனித்தும் ஒருமித்தும் ரூ.498,972.09 இனையும் இத்தொகைக்கு மேலதிக வட்டியாக மாதாந்தம் 2% வட்டியும் குறித்த தொகைக்கு 2019.06.05ம் திகதியிலிருந்து தீர்ப்புத் திகதி வரை மாதாந்தம் 2% வட்டியையும் மேலும் குறித்த தீர்வைத் தொகை முழுவதும் எதிராளிகள் செலுத்தி முடிக்கும் வரை மாதாந்தம் 2% வட்டியையும் செலுத்த வேண்டியுள்ளது.

### ஆதன அட்டவணை

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம், வடமராட்சிப்பகுதி, கட்டைவேலி கோவிற்பற்று, அல்வாய் நீலக்குட்டியர் குறிச்சி இறை. J/400 கிராமசேவகர் பிரிவு, பருத்தித்துறை பிரதேசசெயலர் பிரிவு, பருத்தித்துறை பிரதேச சபைக்கு உட்பட்ட "தண்டயர்சீமா" நிலப்பரப்பு ஒன்று (01 நிலப்பரப்பு) இதற்கெல்லை வடக்கு கந்தன் நல்லானினுடைய ஆதனம், கிழக்கு குமரம் தந்தசாமியினுடைய ஆதனம், தெற்கு மிகுதி ஆதனம், மேற்கு ஒழுங்கை இதற்குச் சேர்ந்தவைகளும் இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் V.N.தங்கமயில் அவர்களால் 20.10.2016ம் திகதியில் 2016 - 306ம் இலக்கத்தில் தயாரிக்கப்பட்ட நிலஅளவைப்படத்தில் துண்டு 1 எனக் காட்டப்பட்டுள்ளதன்படி நிலப்பரப்பு பூச்சியம் குளி பதினேழு தசம் ஆறு ஐந்து (நிலப்பரப்பு 00 குளி 17.65) இதற்கெல்லை வடக்கு வைரமுத்து இராசரத்தினத்தினுடைய ஆதனம், கிழக்கு ஒழுங்கை, தெற்கு ஒழுங்கை. மேற்கு சின்னத்தம்பி பூலிங்கத்தினுடைய ஆதனம், இதடங்கலும் இதற்குச் சேர்ந்தவைகளும்

இது பருத்தித்துறை காணிப்பதிவகத்தில் C48/31 இல் பதியப்பட்டுள்ளது.

வாங்கற்காரன் கொள்விலையில் நாலிலொரு பங்கை (1/4) உடன் அவ்விடத்திலேயே செலுத்துவதுடன் பின்வரும் செலவுகளையும் மேலதிகமாக செலுத்த வேண்டும்.

அரசஇறை (பவுண்டேஜ்) - 1%
விளம்பர செலவுகளும் பிரசித்த செலவுகளும்
ஆதன மதிப்பீட்டு செலவு
விற்பனை சம்பந்தமான போக்குவரத்து செலவுகள்
விற்பனை கமிசன் 2½%
விற்பனவு ஒப்பந்தக் கட்டணம் (நொத்தாரிஸ் தயாரித்த பட்டியலின் படி)
2024ம் ஆண்டு புரட்டாதி மாதம் 25ம் திகதி

நீதிமன்றக் கட்டளைப்படி

துரை.சிறீமோகன்
பதிவு செய்யப்பட்ட ஏல விற்பனையாளர்
இல. 197, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.
(2115)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.09.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.